DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1421 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 30, 2023

# Deputy Mayor of Toronto Jennifer McKelvie congratulates, newly elected Mayor Olivia Chow

# ரொறன்ரோ மாநகரின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள ஒலிவியா சோவிற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள பிரதி மேயர் ஜெனிபர் மெக்கெல்வி

அண்மையில் நடைபெற்ற ரொறன்ரோ மாநகர மேயரைத் தெரிவு செய்யும் தேர்தலில் வெற்றி பெற்ற ஒலிவியா சோ அவர்களை வாழ்த்தியும் பாராட்டியும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் மாநகர சபையின் தற்போதைய பிரதி மேயர் ஜெனிபர் மெக்கெல்வி அவர்கள்.

மேற்படி அறிக்கையில் அவர் தெரிவிக்கையில் “தேர்துல் நடைபெற்று முடிவுகள் வெளியான பின்னர் நான் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒலிவியா சோ அவர்களிடம் தொலைபேசியில் அழைத்து உரையாடினேன். மேலும் வரும் அடுத்து வரும் வாரங்களில் மேயர் அலுவலகத்தை ஒழுங்காக மாற்றுவதற்குரிய ஆயத்தங்களை செய்யவுள்ளதாகவும் உறுதியளித்தேன். பின்னர் மறுநாள் நாள், புதிய மேயர் பதவியேற்கும் மாற்றத்திற்கான செயல்முறையை ஆரம்பிக்கும் வகையில் நாம் இருவரும் நகரசபையில் சந்தித்தோம். மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டவர், நகர எழுத்தாளருடன் அலுவலக அறிவிப்பை வெளியிட்ட பிறகு, ஜூலை 12 புதன்கிழமை பதவியேற்பார் என்றும் அவரது பதவி உறுதி செய்யப்பட்ட பின்னர் அவரது பதவியேற்பு விழா பற்றிய விவரங்களை நாம் வெளியிடுவோம்” என்று அவர் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ரொறன்ரோ மாநகரசபையின் புதிய மேயரைத் தெரிவு செய்யும் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்ற காலப்பகுதியில் பதவியிலிருந்து அகற்றப்பட்டவரான முன்னாள் மேயர் ஜோன் ரோரி வேறு ஒரு வேட்பாளரை தான் ஆதரிப்பதாக அறிவித்தும் மாகாண முதல்வாரன டக் போர்ட் அவர்கள் மற்றுமொரு வேட்பாளரான முன்னாள் ரொறன்ரோ பொலிஸ் பிரிவின் முன்னாள் தலைவரான மார்க் சாண்டர்ஸ் அவர்களை ஆதரிப்பதாகக் கூறியும் பிரச்சாரங்களை மேற்கொண்ட போதும். மக்கள் ஆதரவுடன் ஒலிவ-ியா சோ அவர்கள் ரொறன்ரோவின் புதிய மேயராகத் தேர் தெடுக் கப் பட் டுள் ளமை, அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ‘மக்கள் மேயர்’ என்றும் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல என்பதையும் இந்த தேர்தல் காட்டுகின்றது என்றும் ஒலிவியா சோ அவர்களுக்கு வாக்களித்த தமிழ் அன்பர்கள் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அறிவித்திருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



## ரொறன்ரோ கிறிஸ்தவ திருச் சபை நடத்தும் விசேட ஆராதனை

ஸ்காபுறோவில். 585 மிடில்பீல்ட் வீதி யுனிட் இலக்கங்கள் 7 மற்றும் 8 ஆகியவற்றில் அமைந்துள்ள ரொறன்ரோ கிறிஸ்தவ திருச் சபை நடத்தும் விசேட ஆராதனை நிகழ்ச்சியில் அருட் சகோதரர் எம். டி. ஜெகன் அவர்கள் கலந்து கொண்டு ஆராதனையில் கலந்து கொள்வதோடு ஆசீர்வாதமும் வழங்கவுள்ளார். மேலதிக விபரங்களுக்கு உள்ளே காணப்படும் விளம்பரத்தைப் பார்க்கவும்.

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக அனுபவத்தில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004




**மின்சார வாகனங்கள் மற்றும் பற்றரிகளைத் தயாரிப்பது தற்போதும் எதிர்காலத்திலும் வேலைகளை உருவாக்கி வருகின்றது.**

**மேலும் அறிக ontario.ca/BuildingOurEconomy**

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario



உதயன் **கதிரோட்டம்**

# ‘மக்கள் மேயர்’ என்ற பெயரைத் தட்டிக் கொண்டு, ரொறன்ரோ நகரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒலிவியா சோ

கனடாவின் ரொறன்ரோ மாநகர சபையின் முன்னாள் மேயராகப் பதவி வகித்த ஜோன் ரோரி தனது பதவியை முறையற்ற செயல்களுக்காகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பதவியிலிருந்து தானா-கவே விலகிச் சென்றார்.

அதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக கடந்த 26ம் திகதி திங்கட்கிழமையன்று நடத்தப்பெற்ற மேயர் தேர்தலில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்ட ஒலிவியா சோ அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கும் பொறுப்பு எமக்குள்ளது. ஏனென்றால் தமிழ் மக்களைத் தேடித் தேடி அவர் “எனக்கு வாக்களியுங்கள்” என்று கேட்டுக் கொண்டவர்.

அதனை விட. தேர்தலில் அவர் வெற்றியீட்டியதை அவரது ஆதரவாளர்கள் மட்டுமல்ல. அவருக்கு வாக்களிக்காதவர்கள் கூட கொண்டாடடி மகிழ்ந்து கொண்டிருக்கும் போது. தேர்தல் பிரச்சார காலங்களில் இடம்பெற்ற ‘விரும்பத் தகாத’ விடயங்களை சுட்டிக்காட்டுவதே எமது இவ்வாரத்தின் கதிரோட்டம் நோக்கம் என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

ஆரம்பத்தில் வாக்குக்கணிப்புக்களை பல நிறுவனங்கள் நடத்தியபோது முன்னணியில் நின்றவரும் ஒலிவியா சோ அவர்களே. மக்கள் விரும்பும் ஒரு வேட்பாளராக ஒலிவியா சோ அவர்கள் பிரகாசித்தார். முப்பத்தி எட்டு வீதமான வாக்குகள் அவருக்கு கிடைக்கும் என்று கருத்துக் கணிப்புக்கள் கட்டியம் கூறி நின்றன. இவ்வாறாக ‘மக்களின் மேயர்’ என்ற பெயரை அவர் தட்டிக் கொள்வார் என்று ரொறன்ரோ மாநகரமே எதிர்பார்த்த வண்ணம் காத்திருந்தது. திடீர் என்று ‘தலைவர்கள் இருவர் தங்கள் தெரிவு ஒலிவியா சோ அல்ல. வேறு வேட்பாளர்களே என்று பகிரங்கமாக அறிவிப்புக்களை வெளியிடத் தொடங்கினார்கள்.

அவர்களின் அனா பெயிலோ என்னும் மற்றுமொரு பெண் வேட்பாளருக்கு தனது ஆதரவு என்று அறிவித்தார் பதவி விலகிச் சென்ற ‘குற்றவாளி’ ஜோன் ரோரி அவர்கள். மேலும் முன்னாள் ரொறன்ரோ பொலிஸ் தலைமை அதிகாரி மார்க் சாண்டர்ஸ் அவர்களுக்கே தனது ஆதரவு என்று பகிரங்கமாக அறிவித்தார் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள்.

இவ்வாறான தலைவர்கள் இருவர் தங்கள் ஆதரவை ஒலிவியா சோ அல்லாத இருவருக்கு வழங்குவதாக அறிவித்த போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் ஒருவர் இந்த இரண்டு தலைவர்களுமே தகுதிகளை இழந்தவர்கள் என்றும் அவர்களுக்கு வேட்பாளர்களை முன்மொழியும் தகைமை இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

இறுதியாக தலைவர்களின் தெரிவாக விளங்கிய இருவர் தோற்கடிக்கப்பட்டு நிற்கையில் ‘மக்களின் மேயர்’ என்ற பெயரைத் தட்டிக் கொண்ட ஒலிவியா அவர்கள் தான் ரொறன்ரோ மாநகரின் புதிய மேயராகப் பதவியேற்கத் தயாராகின்றார். எனவே மக்களின் மேயர் என்ற பெயர் எடுத்துக் கொண்ட அவரை நாம் வரவேற்வேற்போமாக.


## TELEMARKETERS WANTED

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாக உரையாடக் கூடிய
TELEMARKETERS
உடனடியாகத் தேவை.
தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

416 754 9492

## Help Wanted

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

**Call - Siva**

**416-706-8160**

## Basement for Rent

Pickering நகரத்தில் Dixie/Glenanna சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 3 அறைகள் கொண்ட Basement உடன-டியாக வாடகைக்கு உண்டு. ஒரு Parking வழங்கப்படும். Brand New Basement for Rent with 3 bedrooms and 2 full washrooms. Separate walk-up entrance. Separate Laundry in basement. Close to schools, 5 mins drive to Pickering Town Centre, grocery stores, go transit, and shopping

விபரங்களுக்கு: 647 648 4598

## கொழும்பில் வீடு விற்பனைக்கு

கொழும்பு-13 கொட்டாஞ்சேனையில் புளுமெண்டால் வீதியில் உள்ள வீட்டுத் தொகுதியில் 2ம் மாடியில் அமைந்துள்ள. ஒரு அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. அண்மையில் திருத்தியமைக்கப்பட்டது.

தொடர்புகளுக்கு 647 779 1712 என்னும் கனடா இலக்கத்தை அழைக்கவும்



Canada — We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |



Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road. Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


# ஜேர்மனி வாழ் கவிதாயினி "ஜெயஸ்ரீ" என்னும் ஜெயந்தினி ஸ்ரீகரக்குருக்கள் அவர்களின் கவிதை நூல்கள் அறிமுகவிழா

(பின் பக்கத் தொடர்ச்சி) விழாவிற்கு சிவாச்சாரியப் பெருமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு கவிதாயினி “ஜெயஸ்ரீ“ அவர்களை வாழ்த்தினர்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் கவிதாயினி “ஜெயஸ்ரீ அவர்களின் படைப்புக்களை நான் முதன் முதலாக படித்தாலும். அவருக்கு ஏற்கெனவே உலகெங்கும் பல வாசகர்களும் நேயர்களும் உள்ளார்கள் என்பதை நான் அறிந்துள்ளேன்.

இங்கிலாந்திலும் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள வானொலிகள் வாயிலாக கவிதை மற்றும் மருத்துவக்குறிப்புக்கள் ஆகியவற்றை தொகுத்து வழங்குவதில் நன்கு அறியப்பெற்றவராக விளங்கும் கவிதாயினி “ஜெயஸ்ரீ அவர்களின் இரண்டு நூல்களில் அடங்கியுள்ள கவிதைகள் சமூகத்தைப் பார்ப்பதும் மேலும் சமூகத்தின் பாத்திரங்களாக விளங்கும் மனிதர்களின் உள்ளுணர்வுகளை வெளிக்கொண்டு வருபவையாகவும் உள்ளன என்று தெரிவித்தார்.

தொடர்ந்து சிவஸ்ரீ சோமாஸ்க் கந்தக்குருக்கள் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கவிதைகளை விமர்ச்சிக்கும் உரைகளை திருவாளர்கள் ஞான கணேசன். மாவி-லி மைந்தன் சண்முகராஜா. “உதயன்“ லோகேந்திரலிங்கம் உட்பட இன்னும்பலர் உரையாற்றினார்கள்.

உரைகள் முடிவுற்றதும் நூல் பிரதிகள் அங்கு வந்தவர்களுக்கு வழங்கப்பெற்றன. அத்துடன் கவிதை நூல்களின் ஆசிரியை கவிதாயினி “ஜெயஸ்ரீ“ அவர்களுக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பெற்றன.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போதும் எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்போம். ஆனால் அந்த நம்பிக்கை அடுத்த நிமிடமே இல்லாது போகிறது

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா

**- மன்னார் நிருபர் (24-06-2023)**

ஒவ்வொரு ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போதும் எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்போம். ஆனால் அந்த நம்பிக்கை அடுத்த நிமிடமே இல்லாது போகிறது. குறித்த அமர்வுகளின் போது எனக்கு ஒன்றும் நடப்பது இல்லை. இம்முறையாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் சனிக்கிழமை (24) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத் தொடரின் அமர்வு இடம்பெற்று வருகின்ற நிலையில், இலங்கையில் வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் களாகிய நாங்கள் 15 வருடங்களாக வீதியில் இறங்கி போராடி வரும் நிலையில், இது வரை எமது பிரச்சினைகள் தீரவில்லை.

இந்த நிலையிலே நாங்கள் இலங்கை அரசாங்கத்தை நம்பாமல் ஐ.நா சபையை நாங்கள் நம்பி வருகிறோம். எங்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும். நிலையான நீதி கிடைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட எங்களுக்கு இவ்வாறான தீர்வு கிடைக்கும் பட்சத்தில் நாங்கள் மன நிறைவடைய முடியும்.

நாங்கள் இறந்த உறவுகளை கேட்கவில்லை.நாங்கள் உயிருடன் கொடுத்த பிள்ளைகளையும்,உறவுகளையுமே கேட்கின்றோம்.

குறிப்பாக வீடு வீடாகச் சென்று பிடித்தவர்கள், இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்த எமது உறவுகளையே மீள எங்களிடம் ஒப்படைக்க கேட்கின்றோம்.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடரில் ஆவது எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும். அயல் நாடுகள் எங்களுக்காக கதைத்து தீர்வு கிடைக்குமாக இருந்தால் எங்களுக்கு பிரயோசனமாக இருக்கும்.

இன்னும் எவ்வளவு காலம் நாங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக வீதியில் நின்று போராடுவது?




எமது உறவுகள் உயிரோடு இருந்தால் அவர்களை விடுதலை செய்யுமாறு நாங்கள் கேட்கிறோம். இல்லை என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள்.

நாங்கள் நீதிக்காக போராடி வருகிறோம். நிதிக்காக போராடவில்லை. ஓ.எம்.பி அலுவலகத்தை கொண்டு வந்ததும் ஜெனிவா. ஆனால் அந்த அலுவலகத்தினால் எங்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லை.

ஓ.எம்.பி அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு சம்பளத்தை கொடுத்து வைத்துள்ளார்களே தவிர இதுவரை குறித்த அலுவலகத்தினால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

இதனால் இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் (ஓ.எம்.பி) எங்களுக்கு தேவை இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடரில் எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும்.

உள்நாட்டு பொறிமுறையில் எங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை.

அதன் காரணமாக நாங்கள் சர்வதேசத்திடம் வந்து நிற்கின்றோம். சர்வதேசம் எமது பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டும்.

ஆனால் இன்று சர்வதேசமே எங்களை திரும்பி பார்க்காத நிலையில் கண்ணை மூடிக்கொண்டு உள்ளமை எமக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு ஜெனிவா கூட்டத் தொடரின் போதும் எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்போம். ஆனால் அந்த நம்பிக்கை அடுத்த நிமிடமே இல்லாது போகின்றது.

குறித்த அமர்வுகளின் போது எமக்காக ஒன்றும் நடப்பது இல்லை. இம்முறையாவது காணாமல் ஆக்கப்படடவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என தெரிவித்தார்.

# மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை கடல் பசு இறந்த நிலையில் கரை ஒதுங்கியது

**- மன்னார் நிருபர் (23-06-2023)**

பாம்பன் அடுத்துள்ள தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரை பகுதியில் இறந்த நிலையில் கரை ஒதுங்கிய 08 வயது மதிக்கத்தக்க கடல் பசுவை கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்து பின் கடற்கரை மணலில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை வனத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினங்களான கடல் பல்லி, கடல் குதிரை, கடல் பசு, சிப்பி, சங்கு, பவளப்பாறைகள் என சுமார் 1400க்கும் அதிகமான அரியவகை கடல் வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் தெற்கு மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் வலைகளில் சமீப காலமாக கடல் பசு, டால்பின் உள்ளிட்டவகையில் சிக்குகிறது. அதனை உடனடியாக மீனவர்கள் உயிருடன் பத்திரமாக கடலில் விட்டு விடுகின்றனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை (22) பாம்பன் தெற்கு மன்னார் வளைகுடா தோணித்துறை கடற்கரையில் இறந்த நிலையில் 8 வயது மதிக்கத்தக்க ஆண் கடல் பசு ஒன்று கரை ஒதுங்கியதை கண்ட மீனவர்கள் மண்டபம் வனச்சரகர் மகேந்திரனுக்கு தகவல் அளித்தனர்.

இதையடுத்து பறவைகள், நாய் உள்ளிட்டவைகள் இறந்த கடல் பசுவின் உடலை சேதபடுத்தாமல் இருக்க கடல் பசு மீது பிளாஸ்டிக் கவர் ஒன்றை போட்டு மூடி வனத்துறையினர் இரவு முழுவதும் பாதுகாத்தனர்.



இறந்த நிலையில் கரை ஒதுங்கியது ஆண் கடல் பசு எனவும் அது சுமார் 1500 கிலோ எடை கொண்டதாக இருக்கலாம் எனவும், கடல் பசு பாறைகளில் முட்டியதால் உயிரிழந்ததா? அல்லது உடல்நிலை சரியில்லாமல் வயதின் மூப்பின் காரணமாக உயிரிழந்ததா? என கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்த பின்னரே முழுமையான காரணம் தெரியவரும் என மண்டபம் வனச்சரகர் தெரிவித்தார்.

கடற்கரை ஓரம் மீன் வனத்துறையினரின் தடையை மீறி மீன் பிடிக்கும் விசைப்படகு மீனவர்கள் படகின் மீது மோதி கடல் பசு இறந்திருக்கலாம் என அப்பகுதியில் மீன் பிடிக்கும் நாட்டு படகு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் மாவட்டத்தில் நாகர்கள், இயக்கர்கள் வாழ்ந்த இடங்கள் தொடர்பான ஆய்வுக் காணொளி வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் அவர்களிடம் கையளிப்பு




**- மன்னார் நிருபர் (26-06-2023)**

மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகன் அவர்களின் ஆய்விலும் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் அவர்களின் அனுசரணையில் மன்னார் மாவட்டத்தில் நாகர்கள், இயக்கர்கள் வாழ்ந்த இடங்கள் தொடர்பாக இடப்பெயர் (ஊர்ப் பெயர்) ஆய்வு மூலமாக உருவாக்கப்பட்ட ஆய்வுக் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ரி. மங்களேஸ்வரன் அவர்களிடம் திங்கட்கிழமை (26) மதியம் கையளிக்கப்பட்டது

இந்த ஆய்வுக் காணொளியானது ஊடகவியலாளர் ஜெகன் அவர்களின் சங்க கால இலக்கிய நூல்கள் மூலமாகவும் மன்னார் மாதோட்டத்தில் மக்கள் வசிக்கும் இடப் பெயர் மற்றும் கள ஆய்வின் மூலமாக உருவாக்கப்பட்டது

இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த தமிழர்களின் மூத்த குடி களாகவும் கோத்திர இனத்தவராகவும் வாழ்ந்த நாகர் இயக்கர் வேடுவர் போன்றவர்கள் தமிழர்கள் என்பதை இந்த காணொளி எடுத்துக் கூறுகிறது.

அணுசரணையாளர் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் மன்னார் ஆசிரியர் ஆலோசகர் சந்திரலிங்கம் றமேஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆய்வில் மூலம் நாகர் இனத்தவர்கள் மன்னார் மாந்தை பகுதியில் நாகதாழ்வு, பெரிய நாவற்குளம், சிறு நாவற்குளம், நாகபடுவான் போன்ற இடங்களிலும் ,இயக்கர் இனத்தவர்கள் மன்னார் கட்டுக்கரை யை அண்டிய பகுதிகளில் பண்ணை வெட்டுவான், தம்பனைக்குளம், கோரமோட்டை, நெடுங்கண்டல், நெட்டாங்கண்டல், பரப்பாங்கண்டல் உட்பட பல பகுதிகளிலும் வாழ்ந்துள்ளார்கள். என்பதை அப்பகுதிகளில் காணப்படும் இடப்பெயர்கள் ஆய்வின் மூலம் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இயக்கர்கள் நாகர்கள் என்பவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இந்திய தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் போன்ற இடங்களில் வாழ்ந்துள்ளார்கள் என்பதை குறித்த காணொளி மூலம் அறிய முடிகிறது.

குறித்த வரலாற்று ஆவணக் கானொளியை பல்கலைக்கழக மாணவர்களுக்கு காண்பித்து எமது வரலாற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ரி. மங்களேஸ்வரன் அவர்களிடம் இந்த காணொளி கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் சமுர்த்தி பயனாளிகள் போராட்டம் நிறைவுக்கு வந்தது — வெளி வந்துள்ள பெயர் பட்டியல் இறுதி தெரிவு பட்டியல் இல்லை

## அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமேல்



- மன்னார் நிருபர் (23-06-2023)

நலன் புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் மன்னாரில் விடுபட்ட, மற்றும் உள் வாங்கப்படாத பயனாளிகள் முன்னெடுத்த போராட்டம் வெள்ளிக்கிழமை (23) மதியம் முடிவுக்கு வந்துள்ளது.

வெள்ளிக்கிழமை (23) காலை முதல் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூன்றாவது நாளாக வெள்ளிக்கிழமை (23) காலை முதல் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடி புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட, மற்றும் உள் வாங்கப்படாத பயனாளிகள் நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு,தமக்கு உரிய தீர்வு வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது மாவட்டச் செயலக பிரதான வீதி பகுதியில் பொலிஸார் விசேட கடமையில் ஈடுபட்டனர். சிறிது நேரம் மாவட்டச் செயலகத்தினுல் மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. தமது தேவைகளை பூர்த்தி செய்ய மாவட்டச் செயலகத்திற்கு செல்ல இருந்தவர்கள் உள்ளே செல்ல முடியாத நிலையில் நீண்ட நேரம் காத்திருந்தனர்.

இந்த நிலையில் மாவட்டச் செயலகத்திற்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திடீர் என பிரதான வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து சேவைகள் சிறிது நேரம் பாதீப்படைந்திருந்தது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந் ஆகியோர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் சிலரை அழைத்து அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.இதன் போது பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக கலந்து கொண்டவர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறினர்.

குறிப்பாக நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டு இருப்பதாகவும் ஆனால் தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறுநீரக நோயாளிகள்,சொந்த வீடு இல்லாதவர்கள், உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை எனவும் குறித்த பட்டியல் பொருத்தமற்றது என தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்கனவே பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாசவின் வீட்டுத் திட்டத்தால் கடனாளிகளாக உள்ளதாகவும் இன்னும் பல பெண்கள் நுண் நிதி நிறுவனக்களில் கடன் பெற்று வாழும் இவ்வாறான நிலையில் சமுர்த்தி கொடுப்பனவு பட்டியலில் தங்கள் பெயர் நீக்கப்பட்டமை தங்களை ஏழ்மையில் தள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் வேலை எனவும் சுட்டிக்காட்டிக் காட்டியுள்ளனர்.

இதன் போது பதில் வழங்கிய அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டிமேல், குறித்த திட்டம் நாடு முழுவதும் ஒரு திட்டத்தினுல் கொண்டு வரப்பட்டுள்ளது. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படாத அல்லது நி நிறாகரிக்கப்பட்டுள்ளவர்கள் மேல் முறையீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும்.

குறித்த மேன்முறையீடு விண்ணப்பம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

பிரதேசச் செயலகங்களில் இதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒரு திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ள மையினால் என்னால் அல்லது பிரதேச செயலாளரினாலே எதுவும் செய்ய முடியாது.

இந்த நிலையில் உங்கள் பிரச்சினையை சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 30 ஆம் திகதிக்கு பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் விசாரணைக்குழு நியமிக்கப்படும்.

அந்த விசாரணைக்குழு உங்கள் மேல் முறையீட்டு விண்ணபத்தை பரிசீலனை செய்து உங்களிடம் விசாரணைகளை மேற்கொள்வார்கள். அதன் பின்னரே தெரிவு பட்டியிலில் தகுதி உள்ளவரா? இல்லையா என்ற தெரிவு இடம்பெறும். அதன் பின்னர் இறுதி தெரிவு பட்டியல் அனுப்பப்படும்.

தற்போது இணையத்தில் வெளிவந்துள்ள பெயர் பட்டியல் இறுதி தெரிவு பட்டியல் இல்லை. நீங்கள் ஆரம்பத்தில் வழங்கிய தகவலின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியல் பதிவேற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதி வரை உங்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறு இடம்பெற்றுள்ளது. பெயர் நீக்கப்பட்டுள்ளது. அவர்கள் மேல் முறையீட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே அனைவரும் மேல் முறையீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு அதன் பின் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார். இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றனர்.




MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் சிறந்த தொலைபேசி ஊடகவியலாளருக்கான விருதை வென்றார் ஜோசப் நயன்

- மன்னார் நிருபர் (26-06-2023)

இலங்கையில் முதல் முறையாக நடத்தப்பட்ட Sri Lanka's FIRST Mobile Journalism Festival தொலைபேசி ஊடகவியல் விருது விழாவில் தமிழ், சிங்கள, ஆங்கில கதைகளில் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஜோசப் நயனின் கதை சிறந்த கதையாக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

USAID Sri Lanka, IREX இணைந்து நடத்திய Srilanka's FIRST Mobile Journalism Festival கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு நாள் நிகழ்வாக கொழும்பில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சர்வதேச ஊடகவியலாளர்கள் ஊடாக தொலைபேசி ஊடகவியல் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் புதிய நுட்பங்கள் தொடர்பில் இலங்கையில் உள்ள ஊடகவியளாலர்கள் ஆவணப்பட தயாரிப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

அதில் ஒரு பகுதியாக நாட்டின் சிறந்த தொலைபேசி ஊடகவியலாளர்களுக்கான கதை தயாரிப்பதற்கான போட்டி இடம் பெற்ற நிலையில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்ட 300 கதைகளில் மன்னார் பேசாலை பகுதியில் மீன்பிடி சார்ந்த உப தொழில்களை மேற்கொண்டு வரும் மீனவ பெண்கள் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஜோசப் நயனால் உருவாக்கப்பட்ட கதை முதலாவது இடத்தை பெற்றுக் கொண்டது.

குறித்த கதை வெற்றி பெற்றதை தொடர்ந்து 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த மொபைல் ஊடகவியலாளருக்கான விருதும் அதே நேரம் மூன்று இலட்சம் பெறுமதியான பரிசும் USAID நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான இயக்குனர் மைக்கல் ஹெய்ன்ஸினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.






# மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் விசேட கலந்துரையாடல்

- மன்னார் நிருபர் (27-06-2023)

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (27) காலை மன்னார் மடு திருத்தலத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமேல், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் உற்பட அழைக்கப்பட திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக இராணுவம்,பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக குடி நீர், போக்குவரத்து, சுகாதாரம், வைத்திய உதவிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ் சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் 2 ஆம் திகதி (02-07-2023) காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக் கொடுக்க உள்ளனர்.

இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மரு அன்னையின் ஆசி பெற வருகை தர உள்ளமையினால் சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்தார்.







# கிளிநொச்சியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

(28-06-2023)

கிளிநொச்சி உதய நகரில் இன்று புதன் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரில் பயணித்த குழுவினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதுடைய கார் சாரதி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கனகபுரம் பகுதிக்கு காரில் பயணித்த பெண்ணுக்கும் மேலும் இரு நபர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் ஏற்பட்ட பழிவாங்கல் காரணமாகவே இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வீணாவின் கவிக்கணை

உன் இலக்கை அடையும்
பயணத்தில் பல தடைகள்
வரலாம் தகர்த்திச்செல்,
சில வேதனைகள் சூழலாம்
விலகிச்செல்,
நீ எண்ணிய எண்ணம்
இதுதான் என்று திடமாக
இருந்துவிட்டால்
உன் வெற்றி நிச்சயம்.

# நாவலப்பிட்டி மொன்றிகிறிஸ்ரோ பெருந்தோட்ட பகுதியில்ஏணைச் சேலையில் கழுத்து இறுகி குழந்தை உயிரிழப்பு!

(28-06-2023)



தொட்டிலில் கழுத்து இறுகி குழந்தை ஒன்று உயிரிழந்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாவலபிட்டி மொன்றிகிறிஸ்ரோ பெருந்தோட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை (27) மதியம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புடவையில் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் 9 வயது குழந்தை ஒன்றின் கழுத்து இறுகி இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டிலிருந்த மற்றுமொரு சிறு குழந்தைக்காக கட்டப்பட்டிருந்த தொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த சம்பவம் நேர்ந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலபிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியா செய்திகள் India News

# மணிப்பூரில் நீடிக்கும் வன்முறை — மத்திய அமைச்சர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை

மணிப்பூர் வன்முறை தொடர்பாக டில்லியில் உள்ள இல்லத்தில் பிரதமர் மோடி மத்திய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

மணிப்பூரில் மைதேயி மற்றும் சிறுபான்மை பழங்குடி சமூகத்தினரிடையே கடந்த மே மாதம் மோதல் ஏற்பட்டது முதல் தொடர்ந்து வன்முறை நிலவி வருகிறது. இதுவரை 120க்கும் மேற்பட்டோர் வன்முறைக்கு பலியாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். மக்கள் வீடு மட்டுமின்றி தீக்கரையாகியுள்ளது. மத்திய, மாநில அமைச்சர்களின் வீடுகளும் இதனைத் தொடர்ந்து, கடந்த வாரம் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் அனைத்துக் கட்சிகள் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற கட்சிகள் அனைத்துக் கட்சி குழுவை மணிப்பூருக்கு அனுப்ப கோரிக்கை வைத்தனர். இந்தநிலையில், அமெரிக்க - எகிப்து பயணத்தை முடித்து விட்டு



டில்லி திரும்பிய பிரதமர் மோடி மணிப்பூர் நிலவரம் குறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட அமைச்சர்களிடம் ஆலோசனை நடத்தினார்.

# சிதம்பரம் நடராஜர் கோயிலை அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம் — அமைச்சர் சேகர்பாபு



சிதம்பரம் நடராஜர் கோயிலை இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் எடுக்க முயற்சித்து வருவதாக, அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஆனி திருமஞ்சன திருவிழா கடந்த 17ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன் முக்கிய நிகழ்வாக ஆனி திருமஞ்சன திருவிழா நடைபெறுகிறது. இதற்காக ஜூன் 24ஆம் தேதி 4 நாட்களுக்கு கனகசபை மீது ஏற பக்தர்களுக்கு அனுமதி இல்லை என தீட்சிதர்கள் சார்பில் அறிவிப்பு பதாகை வைக்கப்பட்டது. இதற்கு பக்தர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள், தீட்சிதர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் இந்து சமய அறநிலையத்துறை ஊழியர், கோயில் விதிப்படி மேலாடையை கழற்றிவிட்டு கனகசபை படிக்கட்டுகளில் ஏறி அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகையை அகற்றினர். எனினும் பக்தர்கள் கனகசபை மீது ஏற தீட்சிதர்கள் அனுமதியளிக்கவில்லை. இதையடுத்து 3 கட்ட பேச்சுவார்த்தை நடந்த போதிலும் தீர்வு எட்டப்படாத நிலையில், மீண்டும் அமைதி பேச்சுவார்த்தை நடக்கும் என இந்து சமய அறநிலையத்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், கனகசபை மீது ஏறி தரிசனம் செய்யவதற்கான தடை 4வது நாளாக தொடர்கிறது.

சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், சிதம்பரம் நடராஜர் கோயில் தீட்சிதர்கள் அதிகார மையத்தை ஏற்படுத்திக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். கோயிலை தங்களது சொந்த நிறுவனம் போல் பாவித்து வருகின்றனர். அதை அரசு தட்டிக் கேட்கிறது என்று தெரிவித்தார். நடராஜர் கோயிலில் உண்டியல் இல்லை எனவும், வைப்பு நிதி, நகை போன்றவை எவ்வளவு உள்ளது போன்ற எந்த தகவலும் தெரிவிக்கவில்லை எனவும் அமைச்சர் சேகர்பாபு கூறினார். மேலும், பொதுமக்கள், பக்தர்களின் எண்ணப்படி சிதம்பரம் நடராஜர் கோயிலை இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் எடுப்பதற்கான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி வருகிறோம். நடப்பது சட்டத்தின் ஆட்சி என்பதை விரைவில் தீட்சிதர்களுக்கு நிரூபிப்போம் என்றும் தெரிவித்தார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4



# ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த 19 ஆம் தேதி தொடங்கிய ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பான ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையை வாசிக்கப்பட்டது.பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை பொறுப்பாகச் செயற்படவில்லை என்பதை அந்த அறிக்கை அழுத்தமாகச் சுட்டிக் காட்டுகின்றது. பொறுப்புக்கூறல் எனப்படுவது இறந்த காலத்திற்கு பொறுப்பு கூறுவது. இறந்த காலத்தில் நடந்த குற்றச்செயல்களுக்கு பொறுப்பு கூறுவது. அக்குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் நிவாரணத்தையும் வழங்குவது. அவ்வாறு நிலைநாட்டப்பட்ட நீதியின் மீது சமாதானத்தை நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பது. இதை ஐநாவின் வார்த்தைகளில் சொன்னால் நிலை மாறு கால நீதியை ஸ்தாபிப்பது.

ஐநாவின் முப்பதின் கீழ் ஒன்று தீர்மானம் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது. அது பொறுப்பு கூறலுக்கானது. ஆனால் அத்தீர்மானத்தின் பிரகாரம் ரணில்-மைத்திரி கூட்டரசாங்கம் தன் பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கவில்லை. மேலும் ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையிலான முரண்பாடுகளின் விளைவாக 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மைத்திரி நிலைமாறுகால நீதியைக்காட்டிக் கொடுத்தார். இலங்கைத்தீவில் நிலைமாறு கால நீதியின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரி தான் பெற்றெடுத்த குழந்தையை அனாதையாக்கினார்.

இலங்கைத்தீவை பொறுத்தவரையிலும் நிலைமாறுகால நீதிக்கான செய்முறைகள் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தின. மஹிந்தவின் பின்னணியில் மைத்திரி 2018 ஆம் ஆண்டு ஏற்படுத்திய யாப்புக் குழப்பம் என்பது ஒரு விதத்தில் நிலைமாறுகால நீதியை விசுவாசமாக முன்னெடுக்க தவறியதன் விளைவுதான். அதனால் ராஜபக்சக்கள் மைத்திரியை ஒரு கருவியாக பயன்படுத்தி ஒரு யாப்புச்சதியைச் செய்ய முயற்சித்தார்கள். ஆனாலும் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் இணைந்து ராஜபக்சகளின் அந்த முயற்சியை தோற்கடித்தார்கள். ரணிலைப் பாதுகாத்தார்கள். அங்கேதான் ராஜபக்சக்கள் ஒரு முக்கியமான முடிவை எடுத்தார்கள். கொழும்பை யார் ஆள்வது என்பதனை தமிழர்களும் முஸ்லிம்களும் தீர்மானிக்காதபடி தனிச் சிங்கள மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கேட்டு பெற்று அடுத்த முறை ஆட்சிக்கு வருவது என்று அவர்கள் முடிவு எடுத்தார்கள். அந்த முடிவை நோக்கி நாடு நகர்த்தப்பட்டது. ஈஸ்டர் குண்டு வெடிப்பு அவ்வாறு மூன்றில் இரண்டு தனிச் சிங்கள பெரும்பான்மை பெறுவதற்கு வேண்டிய அடித்தளத்தை மேலும் பலப்படுத்தியது. முடிவில் கோத்தாய ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்தார். ஆனால் மூன்றில்இரண்டு பெரும்பான்மையோடு வெற்றி பெற்ற அந்த அரசாங்கத்தை சிங்கள மக்களே பின்னர் துரத்தியடித்தார்கள்.

அதன் விளைவாக மீண்டும் ரணிலுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவர் 2015 இல் தொடங்கிய கதையை மீண்டும் தொடர எத்தனிக்கின்றார். நிலைமாறு கால நீதிக்குரிய கட்டமைப்புகளில் ஒன்று ஆகிய உண்மை மற்றும் நீதிக்கான ஆணைக் குழுவை உருவாக்கப் போவதாக அவர் கூறி வருகிறார். ஏற்கனவே நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின் கீழ் உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், இழப்பீட்டு நிதிக்கான அலுவலகம் போன்றவற்றையும் ஒரு பெரிய அடைவாக அவர் காட்டப் பார்க்கின்றார். அண்மையில்ஒரு நிகழ்ச்சியில் முன்னாள் கனேடியப் பிரதமரோடு உரையாற்றும் பொழுது அவர் மேற்குறிப்பிட்ட கட்டமைப்புகளை பெரிய அடைப்புகளாகச் சித்தரிக்கின்றார். அதுமட்டுமல்ல, தமிழ்ப் பிரதிநிதிகளுடன் நடக்கும் பேச்சுவார்த்தைகளையும் ஒரு முக்கிய முன்னேற்றமாகக் காட்டப் பார்க்கிறார்.

ஆனால் அவர் சுட்டிக் காட்டும் கட்டமைப்புகளும் உட்பட இலங்கைத் தீவில் 2015 தொடக்கம் 18 வரையிலுமான நிலைமாறுகால நீதிச் செய்முறைகள் தோல்வியுற்ற பரிசோதனைகளாக முடிவடைந்தன என்ற பொருள்பட சுமந்திரன் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வவுனியாவில் வைத்து ஒரு கூட்டத்தில் கூறினார். அது மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஐநாவுக்கு ஒரு கடிதத்தை எழுதும் நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம். 30/1 ஐநா தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிப்பதற்காக தமிழ்த் தரப்பு பங்காளிகளாக கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவோடும் மேற்கு நாடுகளோடும் சேர்ந்து உழைத்தது. அக்காலகட்டத்தில் நிலைமாறுகால நீதியை நியாயப்படுத்தியவர்களில் சுமந்திரனும் ஒருவர். அவரே பின்னர் ஆறு ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை செய்தோம் அதில் தோற்றுப் போய்விட்டோம் என்ற தொனிப்பட. வனியாவில் வைத்துச் சொன்னார். அதாவது நிலை மாறுகால நீதியின் தமிழ்ப்பங்காளிகள் அந்தப் பரிசோதனை தோல்வியுற்று விட்டது என்று கூறிவிட்டார்கள்.

இந்நிலையில், இப்பொழுது மறுபடியும் நிலை மாறுகால நீதியின் பிரதான தூண்களில் ஒன்று ஆகிய உண்மை மட்டும் நல்லிணக்க ஆணைக் குழுவைக்குறித்து அரசாங்கம் பேசத்தொடங்கியிருக்கிறது. அதற்குரிய சட்ட ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.

இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள்தான் கடந்த 19ஆம் தேதி தொடங்கிய மனித உரிமைகள் கூட்டத் தொடரில், ஐநா மனித உரிமைகள் ஆணையருடைய வாய் மூல அறிக்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பாக மீண்டும் அழுத்திக் கூறப்படுகிறது. அதாவது நிலைமாறுகால நீதி தொடர்பாக அழுத்தமாகக் கூறப்படுகிறது. ஆனால் இங்கே கேள்வி என்னவென்றால் கடந்த எட்டு ஆண்டுகால பொறுப்பு கூறாமைக்கு யார் யார் பொறுப்பு? என்பதாகும்.

முதலாவதாக இலங்கை அரசாங்கங்கள் பொறுப்பு. அதைத்தான் ஐநாவும் திரும்பத் திரும்ப கூறுகிறது. ஆனால் இந்த விடயத்தில் ஐநாவுக்கும் ஒரு பொறுப்பு உண்டு. மேற்கு நாடுகளுக்கு அதைவிடக்கூடப் பொறுப்பு உண்டு.

முதலாவதாக ஐநா கடந்த எட்டு ஆண்டுகளாக அதன் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளதா? கடந்த எட்டு ஆண்டுகளாக என்பதை விடவும் கடந்த 14 ஆண்டுகளாக என்று கேட்பது பொருத்தமாக இருக்கும். 2009க்கு பின்னிருந்து ஐநா நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்குமாறு இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சி செய்த அரசாங்கங்களிடம் கேட்டு வருகின்றது.ஆனால் அதை கட்டமைப்புசார் மாற்றங்களின் ஊடாகச் செய்யமுடியவில்லை. ஏனெனில் இலங்கையில் நிலைமாற்றம் ஏற்படவில்லை. நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை உபதேசிப்பது என்பதே ஓர் அடிப்படைத் தவறு.

இந்நிலையில், கடந்த 14 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கங்களை பொறுப்புக் கூறுமாறு நிர்பந்திப்பதற்கு ஐநாவால் முடியவில்லை. ஏனென்றால் ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வரையறுக்கப்பட்ட மக்கள் ஆணைதான் உண்டு. அது ஒரு நாட்டின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கவோ அல்லது தடைகளை விதிக்கவோ முடியாது. ஐநாவின் ஏனைய உறுப்புகளான பொதுச்சபை பாதுகாப்புச்சபை போன்றவற்றுக்குள்ள அதிகாரம் மனிதஉரிமைகள் பேரவைக்கு கிடையாது. மனித உரிமைகள் பேரவையால் என்ன செய்ய முடியும் என்றால், ஒரு நாட்டின் அரசாங்கம் ஒத்துழைத்தால் மட்டும் அந்த நாட்டில் இறங்கி வேலைசெய்ய முடியும். அந்த நாட்டின் அரசாங்கம் ஒத்துழைக்கவில்லை என்றால் ஒன்றும் செய்யமுடியாது. தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இலங்கைத் தீவிலும் அதுதான் நடக்கின்றது. 2015ல் ரணில் ஆட்சிக்கு வரும் வரையிலும் ஐநா, தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு பார்த்துக் கொண்டிருந்தது. 2015 இல் நிலைமாறுகால நீதிக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் ஐநா ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் கண்துடைப்பான நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருந்தது. 2018க்குப்பின் நிலைமாறுகால நீதி குப்பைத்தொட்டிக்குள் எறியப்பட்டு விட்டது. இப்பொழுது மறுபடியும் ரணில் அதைக் குப்பைத் தொட்டிக்குள் இருந்து எடுத்து உயிர் கொடுக்கப் பார்க்கின்றார்.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரையிலும் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிப்பதற்கு ஐநாவால் முடியவில்லை. அல்லது ஐநா விரும்பவில்லை. அதிகாரம் குறைந்த மனித உரிமைகள் பேரவைக்குள் இலங்கை விவகாரத்தை பெட்டிகட்டியது என்பதே ஓர் அரசியல் தீர்மானம் தான். கேந்திர முக்கியத்துவம்மிக்க ஒரு புவிசார் அமைவிடத்தில் அமைந்திருக்கும் இலங்கைத் தீவை இறுக்கிப்பிடித்தால் அது சீனாவை நோக்கி போய்விடும் என்ற அச்சம் ஐநாவுக்கு உண்டு; அமெரிக்காவுக்கு உண்டு இந்தியாவுக்கும் உண்டு. எனவே இலங்கைத்தீவில் ஐநாவின் செயற்பாடுகள் எனப்படுகின்றவை, புவிசார் மற்றும் பூகோள அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே இலங்கைத்தீவில் பொறுப்புக்கூறாமைக்கு ஐநாவும் ஒரு காரணம்.

2018க்குப் பின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களின் பிரகாரம் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. அது ஒரு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய முன்னேற்றம்தான். ஆனால் அதுகூட மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்டதுதான். அது இலங்கைக்குள் ரகசியமாகத்தான் இயங்கமுடியும். அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் அடுத்தகட்டமாக எங்கே எப்பொழுது பயன்படுத்தப்படும் என்பதைக் குறித்து யாருக்கும் தெரியாது. மேற்கு நாடுகள் தமக்குத் தேவை ஏற்படும் பொழுது, அதாவது பூகோள மற்றும் புவிசார் அரசியலில் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டிய தேவை வரும்பொழுது, அந்தச் சான்றுகளை அரசாங்கத்துக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடும். அதாவது அழுத்தமாகச் சொன்னால் மேற்கு நாடுகளின் பூகோள மற்றும் புவிசார் அரசியல் தேவைகளின் அடிப்படையில் தான் அவை பயன்படுத்தப்படும்.

அதாவது ஐநாவின் நீதி என்பது அரசியல் நீதிதான். அது தூய நீதி அல்ல. ஈழத் தமிழர்கள் அப்பாவித்தனமாக நம்புவதுபோல அது அறத்தின் பாடுபட்டதோ நியாயத்தின் பாடப்பட்டதோ அல்ல. அதனால்தான் இலங்கை அரசாங்கத்தின் மீது நிர்ணயகரமான அழுத்தங்களைப் பிரயோகிக்க மனித உரிமைகள் பேரவையால் இன்றுவரை முடியவில்லை.

இரண்டாவது காரணம், மேற்கு நாடுகள். மேற்கு நாடுகள் இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபைகோ அல்லது பொதுச்சபைக்கோ கொண்டு போகத் தயார் இல்லை. இந்தியாவும் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல பொருளாதார நெருக்கடிக்கு பின்னரும் இலங்கை அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களை, அழுத்தங்களைப் பிரயோகிக்க மேற்கு நாடுகள், இந்தியா, ஐநா போன்றன தயாராக இல்லை. இலங்கைத்தீவை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் இந்தியாவோ அல்லது மேற்கு நாடுகளோ இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தயாராக இல்லை. குறிப்பாக பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவிகள் நிபந்தனைகள் இன்றி வழங்கப்பட்டனவா என்று கேட்குமளவுக்கு நாட்டில் நிலைமை உள்ளது. ஒருபுறம் நாணய நிதியத்தின் உதவிகள் கிடைக்கின்றன. இன்னொருபுறம் சிங்கள பௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

நாணய நிதியம் ஒரு நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் நிபந்தனைகளை விதிக்காது என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது. அது அந்த நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில்தான் நிபந்தனைகளை விதிக்கும் என்றும் கூறப்படுகின்றது. ஆயின், பாதுகாப்புச் செலவினத்துக்காக ஒதுக்கப்படும் ஒப்பீட்டளவில் அதிக நிதியைக் குறைக்குமாறு நாணய நிதியம் கேட்டதா? கேட்டிருந்திருந்தால் படைக்குறைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அது அதன் இறுதி விளைவைப் பொறுத்தவரை ராணுவ மயநீக்கம்தான். ஆனால் மேற்கு நாடுகளோ அல்லது நாணய நிதியமோ அவ்வாறு நிபந்தனைகளை விதித்திருப்பதாகத் தெரியவில்லை.

அரசியல் கைதிகள் ஓரளவுக்கு விடுவிக்கப்படுகின்றார்கள். காணிகள் சிறிய அளவிற்கு விடுவிக்கப்படுகின்றன. இதைத்தவிர பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை. மாறாக, சிங்கள பௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.படைக்குறைப்பு ராணுவ மயநீக்கம் என்பன நடக்கவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. உதவிவழங்கிய நாடுகளும் பன்னாட்டு நாணய நிதியமும் இனப்பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் மீது எந்த விதமான அழுத்தங்களையும் பிரயோகித்திருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. இலங்கை அரசுக்கட்டமைப்பு நொந்து போயிருக்கும் ஒரு காலகட்டத்தில், அதன்மீது அழுத்தங்களைப் பிரயோகித்து இனப்பிரச்சினக்கான தீர்வு தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்குமாறு நிர்ப்பந்திப்பதற்கு ஏன் மேற்கு நாடுகளோ இந்தியா முயற்சிக்கவில்லை? எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் 2009க்குப்பின் தொடர்ச்சியாக ஆட்சி செய்த இலங்கை அரசாங்கங்கள் பொறுப்பு கூறாமைக்கு ஐநாவும் பொறுப்பு. மேற்கு நாடுகளும் இந்தியாவும் பொறுப்பு.தமது சொந்த மக்களுக்கு உண்மையைச் செல்லாத தமிழ் அரசியல்வாதிகளும் பொறுப்பு.

# குடும்ப அரசியல் செய்கிறோமா? பிரதமர் மோடியின் குற்றச்சாட்டுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்



பாட்னா கூட்டத்துக்கு பிறகு மோடிக்கு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், பாஜகவிற்கு சரியான பாடத்தை வழங்க மக்கள் தயாராகி விட்டார்கள் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திமுக உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி கி.வேணு இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "நம்முடைய வேணுவை பற்றி சகோதரர் ராஜா, நம்முடைய நண்பர் டி.ஆர். பாலு ஆகியோர் நேரம் இல்லா காரணத்தால், ஆனால் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக உங்களிடத்தில் சொல்லி இருக்கிறார்கள். நானும் அதைத்தான் வழிமொழிகிற நிலையில் நின்று கொண்டிருக்கிறேன்.

1975 ஆகஸ்ட் 22ம் தேதிதான் நம்முடைய வேணுவிற்கு கருணாநிதி தலைமையில் திருமணம் நடந்தது. எனக்கு ஆகஸ்ட் 20. அதற்கு இரண்டு நாளுக்கு முன்பு எனக்கு. எனவே திருமணத்தைப் பொறுத்தவரை நான் அவரைவிட இப்போது சீனியர். இரண்டு நாள் சீனியர். ஓராண்டுகாலம் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சென்னை சிறைச்சாலையில் அடைபட்டிருந்தபோது, அங்கே திருமண நாளை நானும் கொண்டாடினேன், அவரும் கொண்டாடினார். இது எல்லாம் வரலாறு.இந்த வரலாறு எல்லாம் பலருக்கு இன்னும் புரியவில்லை.

அதுவும் நாட்டின் பிரதமராக இருக்கும் மோடிக்கே தெரியவில்லை என்றால் எங்கே போய் சொல்வது. ஏனென்றால் இது நம்முடைய குடும்பத்தில் நடைபெறும் நிகழ்ச்சி. இது வேணு அவர்களுடைய குடும்பம் மட்டுமல்ல. கழகக் குடும்பம். அண்ணாவால் கருணாநிதியால் கட்டிக் காக்கப்பட்டிருக்கும் கழக குடும்பம் இந்தக் குடும்பம். எனவே அந்தக் குடும்பத்தில் ஒரு கொள்கைக் குடும்பத்தில் அந்தக் கொள்கைக் குடும்பத்தின் இன்றைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் இந்த அடியேன் தலைமையில் இந்தத் திருமண விழா இன்றைக்கு நடந்தேறியிருக்கிறது.இன்றைக்கு சிலர் சிலர் என்று சொல்வதைவிட முக்கிய பொறுப்பில் இருக்கும் பிரதமராக இருக்கும் மோடி, இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு உரையை ஆற்றி இருக்கிறார். குடும்ப அரசியலை நாம் நடத்திக் கொண்டிருப்பதாக. உண்மைதான். இது குடும்ப அரசியல்தான்.

திமுக என்பது குடும்பம் குடும்பமாக இருக்கிறது. அதை அவர் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அத்தோடு நிறுத்தாமல், குடும்பம் குடும்பமாக அரசியலை நடத்திக் கொண்டு, அவர்கள் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள், வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள் என்ற தொனியில் பேசியிருக்கிறார். அறிஞர் அண்ணா இந்த இயக்கத்தை தொடங்கிய நேரத்தில் நம்முடைய உடன்பிறப்புகளை கழகத் தோழர்களை எல்லாம் "தம்பிஞ் தம்பிஞ்" என்றுதான் உரிமையோடு அழைத்தார்கள். அதைத்தொடர்ந்து நம்முடைய தலைவர் கருணாநிதி கழகத் தோழர்களை எல்லாம் கழகத் தோழர்களை மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கும் அத்தனை உடன்பிறப்புகளையும் "உடன்பிறப்பேஞ் உடன்பிறப்பேஞ்'' என்றுதான் அது ஆண்களாக இருந்தாலும் மகளிராக இருந்தாலும் தங்கையாக இருந்தாலும் அக்காவாக இருந்தாலும் அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அத்தனை பேரையும் "உடன்பிறப்பேஞ் உடன்பிறப்பேஞ்'' என்று ஒட்டுமொத்தமாக அழைத்து அந்த உணர்வை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

ஆம், கருணாநிதியின் குடும்பம் என்பதே இந்த தமிழகம்தான். தமிழர்கள்தான்.50 ஆண்டு காலமாக திராவிட இயக்கம்தான் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த 50 ஆண்டு காலத்தில் தமிழகம் வளர்ச்சி அடைந்திருக்கும் அந்த நிலைகள் எல்லாம் பார்த்துவிட்டு, பிரதமர் பேச வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இந்த நவீன தமிழகத்தை உருவாக்கியவர் யார் என்றால் நம்முடைய கருணாநிதி தான். இன்றைக்கு நூற்றாண்டு விழாவை அவருக்காக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பட்டியலை சாதனைப் பட்டியலை போட்டால் நேரம் போதாது. அவ்வளவு பெரிய பட்டியல் இருக்கிறது. அந்த வழியில்தான் இன்றைக்கு ஆறாவது முறையாக நம்முடைய ஆட்சி ஸ்ரீ 'திராவிட மாடல் ஆட்சி'யாக தலைவர் கருணாநிதி வழிநின்று நாம் நம்முடைய பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

குடும்பம், குடும்பம், என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, ஒரு வருடம் மிசாவில் அடைக்கப்பட்டு சிறையில் இருந்த நேரத்தில், அந்தச் சிறையில் இருக்கும் தோழர்களை எல்லாம் அந்தக் குடும்பத்தைச் சார்ந்திருக்கும் உறவினர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் வந்து முறையாக சந்திப்பது வழக்கம். ஆனால் சென்னை சிறைச்சாலையை பொறுத்தவரை இரண்டு மாத காலம் அதற்கு அனுமதி தரவில்லை. ஆனால் அனுமதி உண்டு. நியாயமாக சட்டப்படி அனுமதி தந்தாக வேண்டும். ஆனால் அனுமதி தரவில்லை. தலைவர் கருணாநிதி அறிக்கை விட்டார்கள். "அனுமதி தரவில்லை என்று சொன்னால் சிறைவாசலில் சிறையில் இருப்பவர்களின் உறவினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம். என்னுடைய தலைமையில் நடைபெறும்'' என்று தலைவர் கருணாநிதி அறிவிக்கிறார்கள். அதற்குப்பிறகு அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டு அனுமதி தந்தார்கள். முதல் அனுமதி யாருக்கு என்றால் எனக்குதான் கிடைத்தது. கருணாநிதி வந்து பார்க்க வேண்டும். ஆனால் தலைவர் கருணாநிதி வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

சிறையில் இருக்கும் அனைவரும் பார்த்ததற்குப் பிறகுதான் என்னுடைய மகன் ஸ்டாலினை நான் பார்க்க வருவேன் என்று சொன்னவர் தலைவர் கருணாநிதி. எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், என்னை மட்டும் மகனாகக் கருதவில்லை அவர், சிறையில் இருக்கும் அத்தனை பேரையும் மகனாகக் கருதியவர் நம்முடைய தலைவர் கருணாநிதி எனவே குடும்ப அரசியல் என்று பொருத்தமாகத்தான் நம்முடைய பிரதமர் அவர்கள் சொல்லி இருக்கிறார்.இதுதான் மத்தியில் ஆளும் பாஜக ஆட்சியின் லட்சணம்.இந்த லட்சணத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லி இருக்கிறார். எனவே ஒரு நாட்டினுடைய சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க வேண்டும். மதக் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு நாட்டில் இரண்டு விதமான சட்டங்கள் இருக்கக் கூடாது என்கிறார் நம்முடைய மோடி. எனவே மதப் பிரச்சனையை அதிகம் ஆக்கி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வெற்றி பெற்றுவிடலாம் என்று அவர் கருதிக் கொண்டிருக்கிறார்.நான் உறுதியோடு சொல்கிறேன், நிச்சயமாக உறுதியாக வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு சரியான பாடத்தை மக்கள் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயாராகி விட்டார்கள்.

# தமிழகத்தின் புதிய டிஜிபியாக சங்கர் ஜிவால் நியமனம் யார் இவர்?

தமிழகத்தின் புதிய டிஜிபியாக சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக காவல் துறையின் புதிய தலைவராகவும், சட்டம் ஒழுங்கு டிஜிபியாகவும் இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழக காவல் துறையின் தலைவராக இருக்கும் டிஜிபி சி.சைலேந்திரபாபு வரும் வெள்ளிக்கிழமை (ஜூன் 30) பணி ஓய்வு பெறுகிறார். ஏற்கெனவே, ஓர் ஆண்டு பணி நீட்டிப்பு பெற்று தற்போது அவர் பணி நிறைவு செய்கிறார். இதையடுத்து, புதிதாக சட்டம் ஒழுங்கு டிஜிபியை தேர்வு செய்வதற்கான ஆயத்த பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில், புதிய டிஜிபிக்கான பட்டியலை தேர்வு செய்வற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 22ம் தேதி டெல்லியில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக தலைமைச் செயலாளர் இறையன்பு, உள்துறைச் செயலர் அமுதா, தற்போதைய டிஜிபி சைலேந்திரபாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபிக்கான போட்டியில் சஞ்சய் அரோரா (டெல்லி காவல் ஆணையர்), பி.கே. ரவி ( ஊர் காவல் படை தலைவர்), சங்கர் ஜிவால் (சென்னை காவல் ஆணையர்), ஏ.கே.விஸ்வநாதன் (முன்னாள் சென்னை காவல் ஆணையர்), ஆபாஷ் குமார் (தீயணைப்பு துறை இயக்குநர்), சீமா அகர்வால் (தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணைய இயக்குநர்) உள்பட 10 பேர் இருந்தனர்.

இவர்களில் சஞ்சய் அரோரா, சங்கர் ஜிவால், ஏ.கே.விஸ்வநாதன் ஆகிய 3 பேரின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டன. இந்த 3 பேரில் ஒருவரை தமிழக அரசு தேர்வு செய்ய வேண்டும். இதன்படி, தமிழகத்தின் புதிய டிஜிபியாக சங்கர் ஜிவால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்படி, தமிழக காவல் துறையின் புதிய தலைவராகவும், சட்டம், ஒழுங்கு டிஜிபியாகவும் சங்கர் ஜிவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.யார் இந்த சங்கர் ஜிவால்? உத்தராகண்ட் மாநிலத்தை சேர்ந்த சங்கர் ஜிவால் 1990ம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி. முதுநிலை மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பட்டதாரி. தமிழ், ஆங்கிலம் மற்றும் உத்தராகண்டின் குமாவுனி மொழியில் புலமை பெற்றவர்.இன்ஜினீயரிங் படித்து முடித்ததும் செய்ல் (ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா), பெல் (பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்) நிறுவனங்களில் சிறிது காலம் பொறியாளராக பணியாற்றினார். பின்னர் ஐபிஎஸ் தேர்வில் வெற்றி பெற்று தமிழக பிரிவு ஐபிஎஸ் அதிகாரியாக தேர்வானார். சேலம், மதுரை எஸ்.பி., மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு மண்டல இயக்குநர், திருச்சி காவல் ஆணையர், உளவுப் பிரிவு டிஐஜி, ஐஜி, சிறப்பு அதிரடிப்படை ஏடிஜிபி ஆகிய முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவர். அயல்பணியாக மத்திய அரசில் 8 ஆண்டுகள் பணிபுரிந்த இவர் பிறகு தமிழகம் வந்து அதிரடிப்படை ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டார்.

சிறந்த பணிக்காக 2 முறை குடியரசுத் தலைவரின் பதக்கம் பெற்றவர். சென்னையின் 108வது காவல் ஆணையராக சங்கர் ஜிவால் 08.05.2021 முதல் பதவி வகித்து வந்த நிலையில், தற்போது இவர் தமிழக டிஜிபியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனிடையே, தமிழகத்தின் புதிய தலைமைச் செயலராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டுள்ளார்.

# சிதம்பரம் கோயில் கனக சபையில் பக்தர்கள் தரிசன அனுமதிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு

சிதம்பரம் நடராஜர் கோயில் கனகசபையில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதித்து தமிழக அரசு பிறப்பித்த அரசாணைக்கு தடை விதிக்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது.சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஆனித் திருமஞ்சன விழாவை ஒட்டி, கனக சபை மண்டபத்தில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதியில்லை என கோயில் தீட்சிதர்கள் பதாகை வைத்தனர். அதை அறநிலையத் துறை அதிகாரிகள் அகற்றியதால் பிரச்சினை எழுந்தது. இந்நிலையில், கனக சபையில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதித்து 2022ம் ஆண்டு மே 17ம் தேதி தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை எதிர்த்து சென்னையைச் சேர்ந்த



டி.ஆர்.ரமேஷ் என்பவர் உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், 'ஏழு முதல் பத்து பேர் வரை மட்டும் தரிசனம் செய்யும் அளவில் மட்டுமே கனக சபை உள்ள நிலையில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரும் கோயிலில் 300 முதல் 500 பேரை மட்டும் கனக சபையில் தரிசனம் செய்ய அனுமதிப்பது பாரபட்சமாகிவிடும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், கோயிலின் கால பூஜைகள், அபிஷேகங்கள் கனக சபையில் நடத்தப்படும் சூழலில், பக்தர்களை அனுமதிப்பதால், வழிபாட்டு நடைமுறைகள் பாதிக்கப்படுவதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.தமிழக அரசின் அரசாணை, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு முரணாக உள்ளதாகவும், கோயிலின் வழிபாட்டு முறைகளில் தலையிட அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதால், அரசாணை சட்ட விரோதமானது என அறிவிக்க வேண்டும் எனவும், அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு காலவகாசம்



(28-06-2023)

வில்பத்து வனப்பகுதியை அண்மித்துள்ள மறிச்சுக்கட்டி மற்றும் கரடிக்குளி வனப்பகுதியை அழித்தமை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம்சாட்டி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு காலவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு புதன்கிழமை (28) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வில் அழைக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

ரிஷாட் பதியுதீன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸ் முஸ்தபா, நீதிமன்றில் சமாப்பணங்களை முன்வைத்து மனு தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய கால அவகாசம் கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், உரிய ஆட்சேபனைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு உத்தரவிட்டது.

பின்னர் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி குறித்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மடு அன்னையின் ஆடி திருவிழாவில் பங்கேற்போர் பொழுது போக்கை தவிர்த்துக் கொள்ளுங்கள் – மன்னார் மறைமாவட்ட ஆயர் கோரிக்கை

- மன்னார் நிருபர் (30-06-2023)

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா நாட்களில் விடுமுறை அதிகமாக காணப்படுவதால் அதிகமான மக்கள் இவ்விழாவில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மடுத் திருப்பதிக்கு யாத்திரிகர்களாக வருவோர் இங்கு வழிபாடுகள் நடை பெறுகின்ற போது வீடுகளில் அல்லது கூடாரங்களில் இருந்து உங்கள் பொழுதுபோக்கு தவிர்த்து வழிபாடுகளில் கலந்து கொண்டு அன்னையின் ஆசீர் பெற்றுக் கொள்ளுங்கள் என மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்விழாவை முன்னிட்டு பல்வேறு பணிகளில் ஈடுபடும் அனைத்து திணைக்களங்களின் ஒத்துழைப்பு களுக்கு நன்றி கூறி நிற்கின்றேன்.

உங்கள் ஒத்துழைப்பு இருக்கும் போதுதான் இவ்வாறான பெரு விழாவை சிறப்பாக கொண்டாட முடியும்.


இந்த ஆடி மாத பெருவிழாவுக்கு தற்பொழுது அதிகமான பக்தர்கள் வந்து விட்டார்கள்.

கடந்த ஆண்டு எரிபொருள் தட்டுப்பாடு இருந்தமையால் பெரும்பாலான பக்தர்கள் இவ்விழாவுக்கு வருகை தர முடியாத நிலை இருந்தது. ஆனால் இம்முறை இவ்வாறான பிரச்சனைகள் இல்லாதபடியால் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படும்.

மடு திருப்பதி வளாகத்துக்குள் யாத்திரிகர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள 580 வீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் பலர் இப்பொழுது கூடாரங்களை அமைத்து தங்கி இருக்கின்றனர்.

இன்றைய நிலையை பார்க்கும் போது மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



அத்துடன் 29 ந் திகதியிலிருந்து 3 ந் தி-கதி வரை விடுமுறை தினங்களாக இருப்பதால் அதிகமான சனத்தொகை இவ்விழாவுக்கு வருகை தருவதாக தெரியவருகின்றது.

ஆகவே இவ் திருவிழாவுக்கான ஒழுங்குகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் உண்டு.

ஆகவே அரச மற்றும் ஏனையவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

இதையிட்டு மாவட்ட அரசாங்க அதிபரின் திட்டங்களுக்கு கீழ் யாவரும் சிறப்பான ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நினைக்கின்றேன்.

மேலும் மடுத் திருப்பதிக்கு யாத்திரிகர்களாக வருவோர் இங்கு வழிபாடுகள் நடைபெறுகிற போது வீடுகளில் அல்லது கூடாரங்களில் இருந்து உங்கள் பொழுதுபோக்கு தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பெருவிழாவுக்கு முதல் நாள் அதாவது ஆடி மாதம் முதலாம் திகதி மாலை ஆராதனை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

இதன்பின் திவ்விய நற்கருணை ஆராதனையுடன் இதன் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெருவிழா காலை 5 மணிக்கு முதல் திருப்பலியும் இதைத் தொடர்ந்து 6.15 மணிக்கு ஆயர்களின் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.



கனடிய செய்திகள் Canadian News

## தமிழ்நாடு பிள்ளையார்பட்டி கி. பிச்சைக்குருக்கள் அவர்களுக்கு கனடா துர்கேஸ்வரம் ஆலயத்தால் வழங்கப்பெற்ற "சைவப் பேரரசர்" கௌரவ விருது



கனடா துர்க்கேஸ்வரம் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழாவை தலைமை சிவாச்சாரியப் பெருமகனாக இருந்து சிறப்பாக நடத்திய தமிழ்நாடு பிள்ளையார்பட்டி டாக்டர் கி. பிச்சைக்குருக்கள் அவர்களுக்கு துர்கேஸ்வரம் ஆலய நிர்வாகத்தால் "சைவப் பேரரசர்" என்னும் கௌரவ விருது வழங்கப்பெற்றது.

நூற்றுக் கணக்கான அடியார்கள் கலந்து சிறப்பித்த இந்த வைபவத்தில் கனடா துர்க்கேஸ்வரம் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கணேச சுவாமிகள் தியாகராஜக் குருக்கள் அவரது பாரியார் மற்றும் குடும்பத்தினர் மற்றும் உபயகாரர்கள் ஆகியோர் சூழ்ந்து நிற்க இந்த உயர் கௌரவம் வழங்கப்பெற்றது.

**செய்தி: சத்தியன் - படம்: ஐயா 4 யு**

## மகாஜனக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல்



**- குரு அரவிந்தன்**

மகாஜனக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியும், நிறுவுனர் நினைவு தினமும் சென்ற சனிக்கிழமை 24-06-2023 ஸ்காபரோ மக்கோவான் வீதியில் உள்ள மிலிக்கன் பூங்காவில் இடம் பெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்களான பெற்றோரும் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளுமாகக் குடும்பமாக வந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கோவிட்-19 காரணமாக ஒதுங்கி இருந்தவர்கள் பலரை மீண்டும் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தம்பையா தர்மலிங்கம் அவர்களைச் சங்கத் தலைவர் திரு. விஜயகுமார் அறிமுகம் செய்து வைத்தார். இப்போது கனடாவில் இருக்கும் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்களில் மிகவும் மூத்தவரான இவரது 100வது பிறந்த தினத்தையும் கேக் வெட்டி, பாராட்டுக் கவிதைபாடிப் பழைய மாணவர்கள் கொண்டாடினார்கள். 1923 ஆம் ஆண்டு யூன் மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டியில் பிறந்த இவர் ஆரம்ப கல்வியை அளவெட்டி ஞானோதயா பாடசாலையிலும், அதைத் தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், உயர்கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார்.

மிகவும் ஞாபகசக்தியோடு அவர் சொன்ன பழைய கதைகளைப் பழைய மாணவர்களும், இளைய தலைமுறையினரும் மிகவும் ஆர்வத்தோடு கேட்டார்கள். பாடசாலையில் தங்கள் காலத்தில் திரு. சின்னப்பா அவர்கள் அதிபராக இருந்ததாகவும், அங்கு அப்போது ஐந்து வகுப்பறைகளும், ஒரு நூலகமும் இருந்ததாகச் சொன்னார். அக்காலத்தில் தாங்கள் வேட்டியும் சால்வைத் துண்டும் அணிந்து மேற்சட்டை இல்லாமல் பாடசாலைக்குச் சென்றதாகவும், மலேசியாவில் இருந்து வந்த ஒரே ஒரு மாணவன் மட்டும் அரைக் காற்சட்டையும், கோட்டும் போட்டுக் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

1994 ஆம் ஆண்டு கனடா வந்ததாகவும், தனக்கு உதவிகள் செய்த ஆசிரியர்களான தம்பு மாஸ்டர், சின்னத்துரை மாஸ்டர், காசிப்பிள்ளை மாஸ்டர், சுந்தரம்பிள்ளை மாஸ்டர் ஆகியோரையும் நினைவு கூர்ந்தார்.

பாதுகாப்பு அமைச்சில் பணி புரிந்தபோது டெல்கி ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெறுவதற்காகப் புலமைப்பரிசு பெற்று டெல்கி சென்றதாகவும், அப்போது பிரதமராக இருந்த இந்திராகாந்தியின் அழைப்பின் பெயரில் அவருடன் விருந்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார். மகாஜனக் கல்லூரியின் வெள்ளிவிழா, பொன்விழா, பவளவிழா, நூற்றாண்டுவிழா எல்லாவற்றிலும் கலந்து கொண்ட பெருமை பிரதம விருந்தினரான இவருக்கு உண்டு.

பிரதம விருந்தினரின் உரையைத் தொடர்ந்து சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. புவனச்சந்திரன் நிறுவுனர் பற்றி உரையாற்றினார். அதைத் தொடர்ந்து போசகர் திரு. கதிர் துரைசிங்கம், மற்றும் சிறப்புவிருந்தினர் குரு அரவிந்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள். மழை காரணமாக இளையோருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவில்லை. நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்குக் காலை, மதிய உணவுகள் வழங்கப்பட்டன. செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே முடிவுற்றது.

## கனடா "ஆரபி" புரடக்சன் தயாரிப்பில் வெளிவரவுள்ள "Finder" திரைப்படத்திற்கான இறுதிக் கட்ட பணிகள் சென்னையில் துரிதமாக நடைபெறுகின்றன

### தயாரிப்பாளர் ரஜீவ் சுப்பிரமணியம் சென்னையில் தங்கியிருந்து இயக்குனர் மற்றும் கலைஞர்களுக்கு உற்சாகமூட்டி வருகின்றார்






கனடாவில் கலை மற்றும் இசை சார்ந்த முயற்சிகளுக்கு நல்லாதரவு வழங்கி வரும் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் "ஆரபி" புரடக்சன் தயாரிப்பில் வெளிவரவுள்ள 'Finder' திரைப்படத்திற்கான இறுதிக் கட்ட பணிகள் சென்னையில் துரிதமாக நடைபெறுகின்றன எமது சென்னைச் செய்தியாளர் அருண் அறிவித்துள்ளார். இதே வேளை 'Finder' தயாரிப்பாளர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்கள் கனடாவிலிருந்து சென்று சென்னையில் தங்கியிருந்து இயக்குனர் மற்றும் கலைஞர்களுக்கு உற்சாகமூட்டி வருவதோடு விரைவில் 'Finder' திரைப்படம் வெளியாகும் வகையில் விநியோகஸ்த்தர்களோடு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். இவருக்கு உதவியாக 'Finder' திரைப்படத்தின் இயக்குனர் வினோத் ராஜேந்திரனும் கடுமையாக உழைத்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க. 'Finder' திரைப்படத்திற்கான "டப்பிங்" பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அத்துடன் கவிப்பேரரசு எழுதியுள்ள 3 பாடகளுக்கான இசையமைப்புப் பணிகளும் சமாந்தரமாக இடம்பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

**- சென்னையிலிருந்து செய்தியாளர் அருண்**

A Generous Support of $409,000 from Scarborough Koneswaran Family & S&B Pallets Ltd to Scarborough Health Network

## ஸ்காபுறோ கோணேஸ்வரன் குடும்பத்தினர் மற்றும் அவர்களின் S&B Pallets நிறுவனம் இணைந்து ஸ்காபுறோ வைத்தியசாலைகளின் குழுமத்திற்கு வழங்கிய 4 இலட்சத்து 9ஆயிரம் கனடிய டாலர்கள்




கனடாவில் புகழ்பெற்ற வர்த்தகக் துறை குடும்பத்தினராக விளங்கும் கோணேஸ்வரன் குடும்பத்தினர். அவர் தந்தை கோணேஸ்வரன் புதல்வர்தகள் விஜேய் கோணேஸ்வரன் ரஜீவ் கோணேஸ்வரன். சஞ்சய் கோணேஸ்வரன் மற்றும் ரஞ்சித் கோணேஸ்வரன் மற்றும் அவர்களின் S&B Pallets Ltd நிறுவனம் இணைந்து ஸ்காபுறோ வைத்தியசாலைகளின் குழுமத்திற்கு 4 இலட்சத்து 9ஆயிரம் கனடிய டாலர்கள் வழங்கிய செய்தியான கனடியத் தமிழர்களுக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது.

கடந்த வாரம் இந்த நிதி அன்பளிப்பை வழங்க கோணேஸ்வரன் குடும்பத்தினர் அனைவரும் ஸ்காபுறோ சென்றனரி வைத்தியசாலைக்குச் சென்றிருந்தனர்.

அங்கு வைத்தியசாலை நிர்வாகிகளால் ஒரு விசேட வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கோணேஸ்வரன் குடும்பத்தினர் மற்றும் அவர்களின் S&B Pallets Ltd நிறுவனம் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழ் பேசும் ஒரு தனிக்குடும்பத்தினால் வழங்கப்பட்ட அதிகமான தொகை இதுவென்பதை வைத்தியசாலை நிர்வாகித்தனர் தெரிவித்தபோது அங்கு கூடியிருந்த வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அனைவரும் கரகோசம் செய்து தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

இந்த நிதி அன்பளிப்பில் வைத்தியசாலைக்குத் தேவையான 3 முக்கிய உபரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

- செய்தி: சத்தியன் LJI Journalist






உதயனின் பிரத்தியேகச் செய்தி

# முல்லைத்தீவில் மனித எச்சங்கள்: மேலும் ஒரு மனித புதை குழியா என்று மக்கள் அச்சம்

**(களத்திலிருந்து கனடா உதயனின் நேரடி செய்தி)**

**- நடராசா லோகதயாளன்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித எச்சங்கள் காணப்பட்டுள்ளது போரினால் பாதிக்கபட்ட தமிழ் மக்களிடையே, அது மேலும் ஒரு மனித புதை குழியாக இருக்கலாமோ என்கிற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அங்கு நீர்வழங்கலுக்காக குழாய்கள் பொருத்தப்படுவதற்க்கான வேலைகள் இடம்பெற்று கொண்டிருந்த போதே இவை காணப்பட்டன.

"இங்கு ஒன்றோ அல்லது இரண்டோ இல்லை, அதைவிட கூடுதலாக காண முடிந்தது" என்று வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இந்த மனித எச்சங்கள் வியாழக்கிழமை (29) அன்று கொக்குத்தொடுவாய் மத்தியில் அங்குள்ள மகாவித்தியாலத்திலிருந்து கொக்கிளாயை நோக்கி சுமார் 200 மீட்டர் தொலைவில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையினால் குடிநீர் வழங்கலுக்கான குழாய் பொருத்துவதற்காக தோண்டிய குழியிலேயே இவை காணப்பட்டுள்ளன.

மனித புதை குழிகள் தொடர்பில் அண்மையில் ஐந்து மனித உரிமை அமைப்புகள் இணைந்து வெளியிட்ட கடுமையான அறிக்கையின் அதிர்ச்சியிலிருந்து நாடு இன்னும் மீளாத நிலையில், முல்லைத்தீவில் இந்த கண்டுபிடிப்பு வந்துள்ளது.

இந்த புதை குழி காணப்பட்டவுடன் கொள்ளிளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனக்கு தகவல் தெரிவித்ததாகவும், உடனடியாக






தான் அங்கு சென்றதாகவும் ரவிகரன் கூறினார்.

இவ்வாறு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டமை தொடர்பில் கொக்குளாய் பொலிசாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் பொலிசார் அப்பகுதிக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் முல்லைத்தீவு நீதவானின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர். நீதிமன்ற உத்தரவை அடுத்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தரப்பு கூறுகிறது.

"அந்த இடத்தை பார்வையிட நான் அனுமதிக்கப்பட்டேன். அங்கு உடைகளின் சில பகுதிகளும், எலும்புக்கூடுகளும் காணப்பட்டன. உடைகளில் பெண்களின் ஆடைகளும் இருந்தன. அவற்றை காணும் போது அவை விடுதலைப் புலிகளுடையதாக இருக்கக் கூடும் என்று எனக்கு தோன்றுகிறது. 2-3 மீட்டர் அளவிலான பகுதியில் அந்த உடல் எச்சங்கள் காணப்பட்டன. நான் மீண்டும் வெள்ளிக்கிழமை (30) அங்கு செல்கிறேன், அவ்வேளை பொலிசாரும் நீதிபதியும் வரவுள்ளனர். அந்த எலும்புகூடுகள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டது போலத் தெரிகிறது" என்றார் துரைராசா ரவிகரன்.

இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் முல்லைத்தீவிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

எனினும் இந்த இடம் "மாவீரர் துயிலும் இல்லம் இல்லை" என்பதை உறுதியாக கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த பகுதியிலிருந்த மக்கள் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரம் அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் 2011ஆம் ஆண்டே மீள்குடியமர்த்தப்பட்டனர். மேலதிகமாக தோண்டப்படும் போதும் கூடுதல் உடல் எச்சங்கள் கிடைக்கலாம்".

மிகவும் கொடூரமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி ரத்தக்களறியுடன் முடிவடைந்த நிலையில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரச படையினரிடம் சரணடைந்தனர், அல்லது கையளிக்கப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களை கண்டுபிடிக்க ஒரு அலுவலகம் (ஓ எம் பி) 2016ஆம் ஆண்டு நாடாளுமன்ற தீர்மானம் ஒன்றின் மூலம் அமைக்கப்பட்டாலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் அந்த அலுவலகம் இதுவரை அவ்வகையில் காணாமல் போன ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை.

அந்த அலுவலகமும் ஐ நா மனித உரிமைகள் ஆணையகத்தின் துணை ஆணையரின் கடும் விமர்சனத்திற்கு ஆளானது. ஜூன் மாதம் 21 ஆம் திகதி ஜெனீவா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான நிலை குறித்த தனது வாய்மொழியான அறிக்கையில் துணை ஆணையர் அல் நீத் அம்மையார் ஓ எம் பி அலுவலகத்தை குறை கூறியிருந்தார்.

இதேவேளை பிரான்ஸ் 24 தொலைக்காட்சிக்கு நேர்காணல் ஒன்றை அளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கையில் தென் ஆப்ரிக்கா போன்று உண்மை மற்றும் இணக்கப்பாட்டிற்கான ஆணையம் ஒன்று அமைக்கப்படுகிறது என்றும், போர் குற்றங்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அந்த அமைப்பு விசாரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார். அந்த அமைப்பின் பன்னாட்டுப் பார்வையாளர்களும் இருப்பார்கள் என்றும் ரணில் கூறியுள்ளார்.

ஆனால் மனித உரிமை செயற்பாட்டாளர்களோ, விடுதலைப் புலிகளுடனான இறுதிகட்ட யுத்தம் மற்றும் கடந்த 1980களில் சிங்கள இளைஞர்களின் எழுச்சியை ஒடுக்கிய போது இடம்பெற்ற பாரிய குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை மூடி மறைக்கவே இந்த ஆணைக்குழு அமைக்கப்படுகிறது என்று அஞ்சுகின்றனர்.

இப்போது கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், தமது உறவுகளை தேடுபவர்களின் அச்சத்தையும் கவலையையும் மேலோங்கச் செய்துள்ளது. கடந்த 2300 நாட்களிற்கும் மேலாக பெண்கள் தலைமையிலான அமைதிவழி போராட்டம் தமது சொந்தங்களை தேடி தொடர்ச்சியாக நடைபெறுகிறது. காணாமல் போனவர்கள் என்ன ஆனார்கள் என்ற ஒற்றை பதிலைக் கோரியே அந்த போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்வாறு மனித எச்சங்களை தென்படுவதான செய்தி பரவியதும் உறவுகளை தேடி அலையும் உறவினர்களிடையே பெரும் பதற்றம் நிலவுவதை காண முடிந்தது. இறுதி யுத்தத்தின்போது காணாமல் போனவர்களின் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

இதனையடுத்து இப்பகுதியில் வெள்ளிக்கிழமை நீதவான் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



## வனப்புறு கனடா
## (இன்னிசை வெண்பா)

கனடா எனுமோர் கனிவுறு தேசம்
இனவெறி இல்லா இனிப்புறு நேசம்
வனவளம் எங்கும் வளர்ந்து இருந்து
கனமாய் வருமதி கொண்டது.

பல்லின மக்கள் பரந்து வசிக்கிற
தொல்லை அகன்ற சுதந்திர பூமியே!
அல்லும் பகலுமே ஆலைகள் ஓடிட
செல்வம் கொழிக்கும் சிறப்பு.

வந்தோரை ஆதரிக்கும் வண்ணத் தலமது
நொந்தோர் பிணிகளை நீக்கிடும் தேசமாம்
சொந்தம் அறுந்தோர் சுகம்பெறு நாடிது
சந்தம் வருமெனச் சாற்று.

கல்வி வசதியும் காணி உரிமையும்
பல்வகை மக்களின் பண்புகள் காத்திடும்
பல்லோரும் போற்றும் பரப்பு நிலமதை
எல்லோரும் கூடியே ஏற்று.

அகதியாய் வந்த அனைத்து மனிதர்
சுகமாய் இருக்கச் சமத்துவம் ஈந்தே
தனத்துடன் வாழ்விடம் தந்திடும் நாட்டை
வனப்புடன் வாழவே வாழ்த்து.

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

உலக செய்திகள் World News

# இனப்படுகொலை, இராணுவமயமாக்கல் குறித்த கேள்விக்கு பதிலளிப்பதை தவிர்த்த ஜனாதிபதி




(28-06-2023)

லண்டனில் நடைபெற்ற கூட்டமொன்றில், இனப்படுகொலை, இராணுவமயமாக்கல், நில அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் போன்ற கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர்த்த இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கேள்வி கேட்டவரை பரிகாசம் செய்யும் வகையில், "உங்களுக்கு ஆங்கிலத்தில் பேச இயலாதென்றால், தமிழில் பேசவும், எனக்கு தமிழ் புரியும்" என பதிலளித்துள்ளார்.

கேள்வியை எழுப்பிய வைத்தியர் யோகலிங்கம் உடனடியாக, "இங்குள்ள பலருக்கு எனது ஆங்கிலம் புரியும் என நான் நம்புகிறேன்" என அவருக்கு பதிலடி கொடுத்தார்.



இலங்கையின் வடக்கே இடம் பெறும் இனப் படுகொலை, இராணுவ மயமாக்கல், நில அபகரிப்பு, பௌத்த மயமாக்கல் ஆகியவற்றை நிறுத்த அரசு என்ன செய்கிறது என்று அவர் ஜனாதிபதியை நோக்கி கேள்வி எழுப்பினார்.

நாடு கடந்த தமிழீழ அமைப்பின் ஒரு உறுப்பினரான வைத்தியர் யோகலிங்கம், லண்டனில் கன்சர்வேடிவ் என்வயார்மெண்ட் நெட்வர்க் எனும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் பங்குபெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

இலங்கை தன்னை ஒரு ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்கிறது, ஆனால் அதில் எனக்கு நம்பிக்கை இல்லை எனக் கூறி, தனது கேள்வியை தொடுத்தார். அவர் முடிக்கும் முன்னர் ரணில் இடைமறித்து, "எனக்கு தமிழ் புரியும்" என்று பதிலளித்தார்.

ஜனாதிபதியின் இந்த செயல் சமூக ஊடகங்களில் கண்டனத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் "அகம்பாவத்துடன்" நடந்து கொள்கிறார், "ஜனாதிபதி என்ற முறையில் கௌரவாக நடந்து கொள்ளவில்லை" என விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதுமாத்திரமன்றி, "ரணிலுக்கு தமிழ் புரியுமென்றால், அவருக்கு தமிழர்களின் பிரச்சினை புரியாதா?" என்று சமூக ஊடகங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளன.

சில நாட்களுக்கு முன்னர் ஒரு கூட்டத்தில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம், "உங்களுக்கு வரலாறு தெரியவில்லை என்றால் அதை நான் படிப்பிக்கிறேன்" என கூறி அவரை சிறுமைப்படுத்திய காணொளி வெளியாகியது. இதையடுத்து தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி விலகினார்.

# பாரிஸ் நகரில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள "வெண்மேரி" விருதுகள் வழங்கும் விழாவில் புலம் பெயர் பல் துறை வெற்றியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள்

எதிர்வரும் ஆகஸ்ட் 6ம் திகதி பாரிஸ் நகரில் நடைபெறவுள்ள "வெண்மேரி" விருதுகள் வழங்கும் விழாவில் புலம் பெயர் பல் துறை வெற்றியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். பலதுறைகளில் தொடர்ச்சியாக ஆர்வத்துடன் செயற்பட்டு சேவையாற்றியுள்ள சுமார் 23 வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.



# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# "சாதனா ரத்ன"

## கௌரவ விருது பெற்றார் துர்க்கேஸ்வரம் பிரதமகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்



இளமைக்காலம் முதல் இன்றுவரை, சைவமும் தமிழும் தன்னுயிராய் எண்ணி, சென்ற இடமெல்லாம் திருக்கோவில்களை அமைத்தும், சைவநெறிகளை மக்களுக்குப் போதித்தும் அயராமல் பணிபுரிந்துவருபவர் சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள். கனடாவில் இராஜகோபுரத்துடன் தலைசிறந்த திருக்கோவில் ஒன்றினை உருவாக்கி, பலகாலம் சைவநெறி தளைத்தோங்க வழிவகை செய்யவேண்டும் என்பதற்காக, 30 ஆண்டுகளுக்கும் மேலாக எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் தனித்து நின்று துர்க்கேஸ்வரத்தினை உருவாக்கிய அவரின் அர்ப்பணிப்பினை கௌரவித்து, பிள்ளையார்பட்டி வேதாகம பாடசாலை அதிபராகவும் சிவநெறிக்கழக நிறுவனராகவும், பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் தேவஸ்தான பிரதம குருவாகவும் உள்ள டாக்டர் சிவஸ்ரீ.கி.பிச்சைக்குருக்களும், கும்பாபிஷேக குருமார்களும் இணைந்து "சாதனா ரத்ன" என்ற விருது வழங்கிக் கௌரவித்தனர். இந்தக் கௌரவம் கிடைத்தமை பற்றி சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்களிடம் கேட்டபோது, "இன்னும் எத்தனையோ பணிகள் என் மனத்தில் உள்ளன. இங்கு கனடாவிலும் உள்ளன. தாயகத்திலும் உள்ளன. இறைவன் எனக்கிட்ட பணி இதுவெனக்கருதி, இறுதிவரை சைவப்பணி செய்துகொண்டே இருப்பேன்." என்றார்.

# துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகத்தில் அருள்அதிர்வினை உருவாக்கிய தமிழக சிவாச்சாரியார்கள் மீண்டும் றிச்மன்ட்ஹில் பிள்ளையார் மஹாகும்பாபிஷேகத்தில்

துர்க்கேஸ்வரம் ஆலய மஹாகும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட சிவாச்சாரியார்களின் மந்திர உச்சாடணங்கள் பற்றியும், கிரியா மேன்மைகள் பற்றியும் பக்தர்கள் பாராட்டிவருகின்றனர். மிகவும் பிரயத்தனம் எடுத்து, நேர்த்தியாக குறித்த நேரத்தில் அனைத்தும் நடைபெறும் வகையில் மஹா கும்பாபிஷேகத்தினை நெறிப்படுத்தியிருந்தமை பாராட்டத்தக்கது. அதே எழுச்சியை உருவாக்கிட கும்பாபிஷேக சிவாச்சாரியார்களை றிச்மன்ட்ஹில் பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேகத்துக்கு துர்க்கேஸ்வரம் ஆலயத்தினர் அனுப்பிவைத்துள்ளனர். யூன் 30ம் திகதி அங்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தில கலந்து கொண்டபின் குருமார்கள் நாடு திரும்புவர்.

பல பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மற்றுமோர் மாபெரும் வழிபாட்டில் கலந்துகொள்ள இக்குருமார்களை வரவழைக்க ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளது.



# துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேக கால காட்சிகள்













# வருடாந்த மஹோற்சவ பெருவிழா விஞ்ஞாபனம் 2023



## அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம்

**230 வில்கின்சன் சாலை, பிராம்ப்டன், ON L6T 4N7**

தொலைபேசி: **905-459-7042.** செல்: **416-615-0005**

Email: bramptonbhuvaneswari@gmail.com

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்.
பங்கயக்கரத்தாள் பீதாம்பரமணியிடையாள் பொற்பூண்.
பைங்கள நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள்.
பொங்கிய ஒரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி.

www.Bhuvaneswariamman.ca

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அடியார்களே! உலகின் பல்வேறு ஜீவராசிகள் உய்யும் பொருட்டு ஸ்ரீபிரம்மி மாகேஸ்வரி கௌமாரி வைஸ்ணவி வாராஹி இந்திராணி சாமுண்டா ஸப்த மாதர்களையும் ஒருங்கே கொண்டு ஆதியாய் அனாதியாய் ஒன்றாய் நீக்கமற ஸப்த லோகத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாய் எல்லா வளங்களும் நிறைந்து கனடா நாட்டில், பிராம்ப்டன் நகரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும்

ஸ்ரீமாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை த்வஜரோகணம் தீர்த்த மஹோத்ஸவ உற்சவத்துடன் தொடங்கி பதினைந்து தினங்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் நிகழ அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி 11ம் தேதி (25-06- 2023) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதி உத்திர நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்குமேல் 11.00 மணிக்குள் துவங்கி அடியார்கள், தொண்டர்கள், உற்சவ உபயதாரர்கள் அனைவரும் சடங்குகளாக கீழே உள்ள பட்டியலில் உள்ள நிகழ்வுகளை அறிந்து, ஸ்ரீ புனேஸ்வரியின் பூரண அருள் பெற்று, சகல செல்வங்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**24-06-2023 சனிக்கிழமை மாலை: அனுக்ஞை கணபதி பூஜை கணபதிஹோம் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி. அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்கிரஹணம். யாகசாலை நிர்மாணம் நடைபெறும்.**

**25-06-2023** ஞாயிறு **கொடியேற்றம்**

**30-06-2023** வெள்ளி **மஞ்சம்**

**07-07-2023** வெள்ளி **சப்பறம்**

**08-07-2023** சனி **தேர்த்திருவிழா**

**09-07-2023** ஞாயிறு **தீர்த்தம்**

## திருவிழாக்கால நிகழ்ச்சி நிரல்

### காலை திருவிழா

காலை 7.30 மணி காலசாந்தி பூஜை
காலை 8.30 மணி ஸ்நாபன கும்ப பூஜை. மூலவர். அபிஷேகம்
காலை 10.00 மணி உச்சிகால பூஜை. கொடிஸ்தம்பபூஜை
யாகபூஜை
மதியம் 11.30 மணி
வசந்தம்டப பூஜை. யாகசாலை தரிசனம்.
மதியம் 12.30 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

### மாலை திருவிழா

5.00 மணி: ஸ்தாபன கும்பாபிஷேகம்
6.30 மணி: மூலஸ்தான பூஜை. ஸ்தம்ப பூஜை
7.30 மணி: கலை நிகழ்ச்சிகள்.
8.30 மணி: வசந்தம் பூஜை.
அம்பாள் வீதியுலா நித்யாக்னி, யாகசாலை தரிசனம்
9.00 மணி: பிரசாதம் வழங்குதல்.



### சர்வபோதகம்

சிவமரத்னா: சிவஸ்ரீ.வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
மஹோற்சவ குருமார்கள்: சிவஸ்ரீ. மகேஸ்வர குருக்கள்
சிவஸ்ரீ. இராதாகிருஷ்ண குருக்கள்
சிவஸ்ரீ. கௌசிக் குருக்கள்

கனடாவாழ் குருமார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு :
தேர் தீர்த்தத் திருவிழா அன்று பால்குடம் மஞ்சள் குடம்
அங்கபிரதக்ஷணம் காவடி கற்பூர சட்டி எடுக்க விரும்புவோர் முன்பதிவுக்கு காரியாலத்தை தொடர்பு கொள்ளவும் 905-459-7042

தேவஸ்தான மங்கள இசை:
வித்வான். திரு சிவமயம் குழுவினர்.
புஷ்ப அலங்காரம், பூமாலைகள்:
திரு. அருந்தவராசா (Harini Foods)
திரு. பாலா (ஐஸ்வரியம் ஸ்டோர்ஸ்)
ஆலய நிர்மான ஸ்தபதி: விஸ்வபிரம்ம திரு. குணாளன்

என்றும் ஸ்ரீபுவனேஷ்வரி ஸம்ருதியில்
சிவமரத்தினம்: சிவஸ்ரீ. வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
ஸ்தாபகர், தலைமை அர்ச்சகர்
இல்லத்திருமணம் குடிபுகுதல்
சாந்தி பரிகாரப்பூஜைகளுக்கு அனுகவும்
416-615-0005

**உங்கள் குடும்ப விழாக்களை கொண்டாட அழகிய மண்டபம் உள்ளது விபரங்களுக்கு ஆலயத்தை அனுகவும்**

# பேராறுகள் பாயாத வடக்கிற்கு சீனித் தொழிற்சாலை பேராபத்து

- நடராசா லோகதயாளன்



நிலத்தை சீனாவிற்கு வழங்குவார்களா அல்லது சீயன்னாவிற்கு வழங்குவார்களோ என்பதற்கு அப்பால் வவுனியாவில் கரும்புச் செய்கை மேற்கொள்ளும் அளவிற்கு போதிய நீர்வளம் கிடையாது என்பதே தற்போது அங்கே உளள முக்கிய பிரச்சணையாகவுள்ளது.

சீனாவிற்கான கரும்புச் செய்கைக்காக வவுனியா மாவட்டத்தில் மொத்தம் 30 ஆயிரம் கெக்டேயர் நிலம் வழங்குவதற்கான அனுமதியை சில நாட்களிற்கு முன்னர் அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தினை தேசிய முதலீட்டுச் சபையின் ஊடாக நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அமைச்சரவைக்கு நேரடியாகச் சமர்ப்பித்தார்.

இதிலே தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சீனவின் முதலீட்டாளர்களின் ஓர் சீனி உற்பத்தி தொழிற்சாலையான சூடெக் தொழிற்சாலையை வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நயினாமடுவில் 492 ஏக்கர் அல்லது 200 கெக்டேயர் நிலப்பரப்பில் அமைக்கவும் அதற்கான சீனி உற்பத்திற்கு தேவையான கரும்புச் செய்கைக்கு 30 ஆயிரம் கெக்டேயர் நிலம் வழங்கவுமே அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த தொழிற்சாலையின் கரும்புச் செய்கைக்கு வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும் நிலம் வழங்கப்படுவதோடு அயல் மாவட்டங்களிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களிற்கு என்னும் பெயரில் மேலும் நிலம் வழங்கவும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.



இதற்கமைய வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுமே அதிக நிலங்கள் வழங்கப்படவுள்ளதோடு அயல் மாவட்டமான முல்லைத்தீவிலும் குறிப்பிட்டளவு நிலம் இதற்குள் உள்வாங்கப்படவுள்ளதாக வெளிவரும் செய்தி தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் கருத்து தெரிவிக்கையில்:

“சீனித் தொழிற்சாலைக்கான நில விநியோகம் தொடர்பிலே ஜனாதிபதியை சில தமிழ் தரப்புக்கள் தனியாகச் சந்தித்ததாகவும் இந்த சீனி உற்பத்தி தொழிற்சாலைப் பிரதிநிதிகள், தேசிய முதலீட்டுச் சபையின் பிரதிநிதிகள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே மாதம் 18ஆம் திகதி மேற்கொண்ட இரகசிய கலந்துரையாடலில் ஓர் கட்சியின் பேச்சாளர் கலந்துகொண்டமை தொடர்பிலும் பத்திரிகைகளில் செய்தியாக வெளியாகியது. இருந்தபோதும் உள்ளூரில் தலைவர்கள் வாய் திறக்கவில்லை.

இந்த தொழிற்சாலைக்கு நிலம் வழங்கும் தீர்மானம் மேற்கொண்ட அதே அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்த தமிழ் அமைச்சர் தனது முயற்சியால் வனப்பகுதிகளை விடுவிக்க நடவடிக்கை இடம்பெறுவது தனது சாதனையாக முகநூலில் பதிவேற்றிய போதிலும் அது தொடர்பில் நீண்ட காலமாகவே குரல் எழுப்பி பல முயற்சிகளை மேற்கொண்டு வரும் எமது சக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், இ. சாள்ஸ் நிர்மலநாதன் போன்றோர் ஜனாதிபதி வரை மேற்கொண்ட முயற்சிகளை இருட்டடிப்புச் செய்ய முயன்றபோதும் இந்த சீனித் தொழிற்சாலைக்கான நிலங்கள் தொடர்பில் வாய் திறக்கவில்லை. அவ்வாறானால் சீனித் தொழிற்சாலைக்கு நிலம் வழங்கும் விடயத்திற்கு அமைச்சரும் அவரது கட்சியும் ஆதரவளிக்கின்றதாகவே கருதவேண்டியுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் இந்த விடயத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் அரசுக் கட்சி இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்பதோடு இதற்கான கண்டனத்தை நாம் பகிரங்கமாகவே தெரிவிக்கின்றோம். ஏனெனில் 30 ஆயிரம் கெக்டேயர் அல்லது 72 ஆயிரம் ஏக்கர் நிலம் என்பது ஓர் சாதாரண விடயம் அல்ல. கரும்பு அதிக நீரை உறுஞ்சும் ஓர் பயிர். இதனால் அந்த மாவட்டமே பாலைவனமாக மாறும் அபாயமும் உள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக இந்த நிலத்தை வழங்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக செயலபடும் நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை பல தடவை சந்தித்தபோதும் இது தொடர்பில் இன்றுவரை எந்த தகவலும் தெரிவிக்காதமை எமக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றின் அடிப்படையில் அந்த மாவட்ட மக்களுடன் அப் பிரதேச மக்களின் ஒப்புதல் அல்லது பூரண சம்மதம் இன்றி எந்த திட்டத்தை தினிக்க முயன்றாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்”.



இதேநேரம் இது தொடர்பில் நெடுங்கேணி விவசாயிகள் சங்கத் தலைவரான பூபாலசிங்கம் கருத்து தெரிவிக்கையில் “தற்போது நெற் செய்கைக்கும் தென்னஞ்செய்கைக்குமே போதிய நீர் கிடையாது என்பதோடு இவற்றை யானைகளிடம் இருந்து பாதுகாப்பதே பெரும்பாடாக உள்ளது. இதற்கு மத்தியில் இங்கே பல ஆயிரம் ஏக்கர் கரும்புச் செய்கை என்பது யானைகளை வலிந்து அழைக்கும் நடவடிக்கையாக அமையும் அதாவது வேலியில் போகும் ஓணாணை மடியில் விட்ட கதையாகவே அமையும். யானைகள் கரும்பை விரும்பி உண்ணும் என்பதனால் எந்த வகையிலும் கட்டுப்படுத்தவே முடியாது. இதனால் கரும்பு விளைந்து அறுவடை நெருங்கும்போது விவசாயிகள் அல்லது இதற்காக முதலீடு செய்தவர்கள் தற்கொலை செய்யும் நிலைதான் ஏற்படும்” என்றார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரான பொ. ஐங்கரநேசன் கருத்து கூறுகையில், “பேராறுகள் பாயாத வடக்கிற்கு இந்த சீனித் தொழிற்சாலை பேராபத்தையே தரும்” என்றார்.

மேலும், இன்று உலகில் சகல அபிவிருத்தியும் நீர்ச்சுவடை வைத்தே திட்டமிடப்படுகின்றது. இங்கே ஒரு கிலோகிராம் கரும்பை உற்பத்தி செய்ய 210 லீற்றர் நீரும் ஒரு கிலோ சீனியை உற்பத்தி செய்ய ஆயிரத்து 780 லீற்றர் நீரும் தேவை என கணக்கிடப்படுகின்றது, இதுவே கரும்புச் செய்கைக்கான நீர்ச் சுவடையின் குறிகாட்டியாகும் எனவும் ஐங்கரநேசன் விவரித்தார்.

“இன்று வளர்முக நாடுகள் தமது மண்ணை பாதுகாக்கும் நோக்கில் பிற நாட்டில் வேலை வாய்ப்பு என்னும் போர்வையில் இந்த வகையான தொழிற்சாலைகளை அமைக்கின்றனர்.

உணவுத் தாணிய உற்பத்தியை பாதிக்கும் என்பதனை அவர்கள் உணர்ந்துள்ளமை மட்டுமன்றி அனுபவத்திலும் கண்டுள்ளனர். வடக்கில் தற்போது இங்குள்ள சிறு குளங்களை நம்பியே விவசாயம் உள்ளது. சீனியின் பயன்பாட்டை குறையுங்கள் என விளம்பரம் செய்துகொண்டு பாரிய சீனித் தொழிற்சாலையை வடக்கில் அமைக்க முனைகின்றனர். எமது மண்ணில் எத்தனையோ நல்ல திட்டங்களை முன்னெடுக்க முடியும் அதில் குறிப்பாக பனைசார் உற்பத்தி தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். இத்தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டு நீர் இல்லை என மகாவலியை திருப்பி நிலத்தையும் பறிகொடுக்க எமது சில அரசியல்வாதிகளே துணைபோகின்றமை தமது தாயையும் தாரத்தையும் விற்றுப் பிழைப்பதற்கு ஒப்பானது. எனவே மண்ணையும் மக்களையும் நேசிக்கும் எவரும் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவே கூடாது” என்று ஆணித்தரமாக வாதிடுகிறார்.

இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் வெறுமனே அபிவிருத்தியை எதிர்ப்பவர்கள் அல்ல. மாறாக தமது வயிற்றுப் பிழைப்பிற்காக எமது மக்களையும் மண்ணையும் விற்றுப் பிழைக்க முனையும் போலி தேசியவாதிகளை இனம் காட்டவும் வேண்டும் என்றார் பொன். ஐங்கரநேசன்.

இது தொடர்பில் செட்டிகுளத்தை சேர்ந்த நயினார் செல்லக்கண்டு தனது கருத்தை பகிர்ந்து கொண்டார்.

“இந்த விடயத்தில் கட்சி அரசியலிற்கு அப்பால் அப்பகுதியின் இருப்பும் அங்கே வாழும் மக்களின் இயற்கை வாழ்வுமே மிக முக்கியமானது. இந்த நிலையில் அந்த மக்களின் வாக்கை அதிகமாக கோருகின்ற ஓர் அரசியல் கட்ணியின் தலைவரும் பிரமுகருமே இதன் பின்னணியில் இருப்பதாக பல தடவை ஊடகங்களில் செய்தி வெளிவந்தபோதும் அவர்கள் வாய்மூடிகளாக இருக்கின்றனர் என்பதனால் சந்தேகம் மேலும் வலுக்கின்றது. வேறு சில அரசியல் கட்சிகளின் தலைவர்களோ சீனாவிற்கு வழங்கி விடுவார்களோ என அஞ்சி எதிர்க்கின்றனர். கரும்புச் செய்கைக்காக சீனாவிற்கு வழங்கினாலும் சரி சீயன்னாவிற்கு வழங்கினாலும் சரி அப்பிரதேசத்தின் இயற்கைச் சமநிலை கண்டிப்பாக பாதிப்படைந்தே தீரும். இது தற்காலிகமாக மூன்று ஆண்டு அல்லது ஐந்து ஆண்டு திட்டமாக அமைய மாட்டாது. ஏனெனில் உற்பத்தி தொரிற்சாலைக்கே 200 கெக்டேயர் ஒதுக்கி பல ஆயிரம் மில்லியன் முதலிடப்படவுள்ளதன் மூலம் அங்கே உள்ள அழிவின் ஆரம்பப்புள்ளி தெரிகின்றது.

வன்னியிலே உள்ள பல தொழிற்சாலைகள் ஆண்டுக் கணக்காக மூடப்பட்டுள்ளபோதும் அவற்றை இயக்க நடவடிக்கை எடுக்கவோ அல்லது அதற்கு முதலிட தயார் இல்லாத அரசு எமது பிரதேசத்தின் இயற்கை வளத்தை ஏலமிட முடிவு செய்து விட்டதா என்ற ஐயம் எழுகின்றது. இங்கே நான் இயற்கை வளம் எனக் குறிப்பிடும்போது சிலர் கருதக்கூடும் கரும்பில் என்ன இயற்கை அழிவு என்பர். ஆனால் கரும்புச் செய்கைக்கு மிக அதிக நீர் தேவைப்படும் அதனால் அயலில் உள்ள நீர்களைக்கூட உறிஞ்சும் தன்மை காணப்படும். தற்போது இப்பகுதிகள் மான், மரை, மயில் மட்டுமன்றி முயல், உக்குளான் போன்ற எழில்மிகு விலங்குகளின் வாழ்விடமாகவோ அல்லது நடமாட்டப்பகுதியாகவோ காணப்படுவதனால் கரும்பு ஓர் சுனைத் தன்மை கொண்ட பயிர்ப் பிரதேசத்தை அவைகள் தவிர்க்கும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு ஒரு சிறிய பகுதிகளிற்குள் முடக்கப்படும்போது இலகுவில் வேட்டைக்காரரின் கரங்களிற்குள் அகப்படும் ஆபத்தும் ஏற்படும். மாறாக கொடிய விலங்குகளாக கருதப்படும் கரடி, பாம்புகளிற்கு அதிக வாழ்விடங்களாக மாறும் தன்மையும் உண்டு. அப்போது வன விலங்குகளின் சமநிலை கண்டிப்பாக பாதிப்படையும் என்றார்”.



# இலங்கையில் சமூக ஊடகங்கள் தொடர்பான முறையான கட்டுப்பாடுகள் இல்லாததனால் யாரும் எதனையும் பேசலாம்?



(28-06-2023)

சமூக ஊடகங்கள் தொடர்பான முறையான கட்டுப்பாடுகள் இல்லாததனால் யாரும் எதனையும் பேசலாம், எதனையும் எழுதலாம் என்ற நிலை உருவாகியுள்ளது என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக தென்கிழக்கு பல்கலைக்கழகம் தொடர்பான வெளிவரும் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் முகமாக விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

குற்றச்சாட்டுக்களும் பதில்களும்

உபவேந்தர் தெரிவு

உபவேந்தரினைத் தெரிவுசெய்வதற்கு இரண்டு வகையான புள்ளியிடல் முறை காணப்படுகிறது. முதலாவது புள்ளியிடல் UGC ஆல் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்படுவது. இக்குழு UGC ஆல் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் மூதவை நியமன உறுப்பினர்களையும் கொண்டது.

இக்குழு அரசியல் செல்வாக்கற்ற சுயாதீனமானவர்களைக் கொண்டது. இரண்டாவது புள்ளியிடல் முறை பேரவை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுவது. முதலாவது புள்ளியிடல் முறையில் நான் அதிக புள்ளிகளுடன் முதலிடம் பெற்றேன்.

இரண்டாவது புள்ளியிடலில் சில பேரவை உறுப்பினர்கள் எனக்குப் புள்ளிகளைக் குறைத்து வழங்கினர். அதனால் இரண்டாவது புள்ளியிடலில் மிகச் சிறிய புள்ளி வித்தியாசத்தில் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டேன். இரு வகைப் புள்ளியிடலிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களது விபரம் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். மூவரில் எவரையேனும் உபவேந்தராக நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு முழு அதிகாரமுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட மூவருள் நான் மட்டுமே பேராசிரியராக இருந்தேன். ஏனைய இருவரும் சிரேஷ்ட விரிவுரையாளர்களே. பதவி நிலை, புள்ளிகள் அடிப்படையில் நான் முன்னிலை வகித்தேன். அதனால் ஜனாதிபதி என்னை உபவேந்தராக நியமனம் செய்தார்.

நியமனம்

நான் உபவேந்தராக நியமிக்கப்படுவதற்கு முன்னரும் பல போலிக் கடிதங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது. உபவேந்தராக நியமிக்கப்பட்டு பதவியினை பொறுப்பேற்பதற்கு குறிப்பிட்டகாலம் தாமதிக்க வேண்டியிருந்ததது. இடைக்காலத்தில் எனது நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு சில குழுவினர் பகீரத முயற்சி எடுத்தனர். எனக்கெதிராக நூற்றுக்கணக்காண பெட்டிசன்கள் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது.

அவர்களது பெட்டிசன்களில் உண்மையில்லாததன் காரணமாக அதிகாரிகள் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை. இருப்பினும் அவர்களால் எனது பதவியினை இரத்துச் செய்யமுடியவில்லை. பதவியிலிருந்த உபவேந்தரின் பதவிக்காலம் முடிவுற்றதும் நான் பதவியினைப் பொறுப்பேற்றேன். பதவியேற்றதும் பல்கலைக்கழகத்தினை பல்வேறு வழிகளிலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்தேன்.

பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் எனது நிருவாகத்திற்கு முழு ஆதரவினை வழங்கினர். பதவியேற்றதும் பல்கலைக்கழக ஆளணியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. மிகவும் வெளிப்படைத்தன்மையான முறையில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

நேர்முகத் தேர்வில் தோல்வியுற்ற பலர் எனக்கெதிராக சமூக ஊடகத்தில் விமர்சனங்களை தொடுக்க ஆரம்பித்தனர். பல்கலைக்கழக நிருவாகத்தினை ஒழுங்குபடுத்துவதற்கும் நான் நடவடிக்கை எடுத்தேன்.

சில விரிவுரையாளர்களது ஒழுக்காற்று விசாரணைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. பட்டப்பின்படிப்பினை உரிய காலத்திற்குள் நிறைவுசெய்யாதவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னர் சட்டப்படி இராஜினாமாச் செய்தவர்கள் மீண்டும் முறைகேடாக பல்கலைக்கழகத்திற்கு நுழைவதற்கும் முயற்சித்தனர்.

அத்தகையவர்கள் தொடர்பில் சட்டத்திற்குப் புறம்பாக என்னால் அவர்களை இணைக்க முடியவில்லை. இத்தகையவர்கள் என்னைப் பற்றியும் எனது நிருவாகம் பற்றியும் போலித் தகவல்களை வழங்கிவருகின்றனர்.

தொடர்ச்சியான பெட்டிசன்களை அனுப்பி அதிகாரிகளுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றனர். சமூக ஊடகங்களினூடாக எனக்கெதிராக போலிப் பிரச்சாரங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

சில ஊடகங்களில் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி போலிச் செய்திகளை பிரசுரிக்கின்றனர்.

நான் பதவியேற்றது முதல் இந்தத் தரப்பினர் நாசகார செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களது ஒவ்வொரு முயற்சியும் முறைகேடானது என்பதால் அவை முறியடிக்கப்பட்டன.

உயர் அதிகாரிகளிடம் தமது தொடர்பினை பயன்படுத்தி இவர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். சட்ட ரீதியாக எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்த நியாயமான காரணங்களும் இல்லை.

அதனால் எனக்கெதிராக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளேன். சில சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் என்னை அகற்ற முயற்சி எடுக்கப்பட்டது. அதற்கு இசைவாக ஊடகச் செய்திகளும் இந்த நாசகாரச் குழுவினால் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழக உபவேந்தரினை சட்டரீதியாக அகற்றுவதற்கு ஒரு முறை இருக்கிறது. பல்கலைக்கழக நிருவாகம் சீர்குலைந்திருந்தால் மட்டுமே அதனைச் செய்யமுடியும். ஆனால் எமது பல்கலைக்கழகம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

விரிவுரையாளர்களும் நிருவாகிகளும் மாணவர்களும் மிகவும் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றனர். பல்கலைக்கழக கல்வி மற்றும் இதர நடவடிக்கைகளுக்கு எந்தப் பங்கமும் இடம்பெறவில்லை. எந்தவொரு மாணவர் எதிர்ப்பும் பல்கலைக்கழக நிருவாகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படவில்லை. மொத்தத்தில் பல்கலைக்கழக நிருவாகம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சீர்குலையவில்லை. இந்நிலையில் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்மீது சுமத்தப்பட்டுவருகின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்களில் எந்த அடிப்படையும் இல்லை. இவ்வளவு காலமும் நான் பொறுமையாக இருந்தேன. இக்குற்றச்சாட்டுக்களை சட்ட ரீதியாக அனுகுவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

சமூக ஊடகத்தினை தவறாகக் கையாளும் குழுவினர் போலிச் செய்திகளை வெளியிட்டுவருகின்றனர். எமது பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரையில் இந்த விடயம் நீண்டகாலமாக இடம்பெற்றுவருகிறது. இந்தத் தரப்பினர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர்.

முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் நாஜிம் அவர்களது நிருவாகத்தினைக் சீர்குலைக்க சதிசெய்தனர். ஊடக மாநாடுகளை நடத்தினர், அரசியல்வாதிகளைச் சந்தித்தனர். நாசகார வேலைகளில் ஈடுபட்டனர். இத்தகைய நாசகார வேலைகளில் ஈடுபடுவது இவர்களது வழக்கமாக இருந்து வருகிறது. இவர்கள் தமது கடமைப் பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றுவதில்லை. உரிய காலங்களுக்குள் தமது பட்டங்களை முடிப்பதில்லை. இந்தத் தரப்பின் நடவடிக்கைகளுக்கு ஒரு சில நிருவாகிகளும் ஊழியர்களும் துணைபுரிகின்றனர். பல்கலைக்கழகத்தினை ஒரு பதட்ட நிலையில் வைத்திருப்பதனை இவர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

ஆனால் இவர்களது இந்த நாசகாரச் செயல்களுக்கு நான் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. இந்தப் பல்கலைக்கழகம் வீழ்ச்சியுறுமாக இருந்தால் அதற்கு இந்தத் தரப்பினரே முழு முதற்காரணம். எனது நிருவாகம் தொடர்பாக UGC கோரிய விளக்கங்கள் அனைத்திற்கும் உரிய பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழத்தில் தீர்மானங்கள் கூட்டு அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன.

தற்துணிவு அடிப்படையில் நான் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பல்கலைக்கழக நிருவாகத்தில் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் போன்ற பல பதவிகள் உள்ளன. கீழுள்ள அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்று கூட்டு அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

எனது நிருவாகத்திற்கு எதிராக எந்த பல்கலைக்கழக அதிகாரிகளும் என்னிடம் முறையிடவில்லை. எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் முறையாகக் கையளப்பட்டுள்ளன. எனது நிருவாகம் சட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டது என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது.

அதன் காரணமாகவே என்னை பதவியிலிருந்து அகற்றுவதற்கு எதிராக நீதி மன்றத்தினை அனுகியுள்ளேன். மனுவினை மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது. என்னை பதவியிலிருந்து அகற்றுவதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையும் விதித்துள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த சமூக விரோதிகள் மீண்டும் ஊடகங்களைப் பயன்படுத்தி என்னை விமர்சிக்கின்றனர். சில பொறுப்பு வாய்ந்தவர்களும் செய்திகளின் உண்மைத் தன்மையினை அறியாது கருத்துவெளியிடுகின்றனர். இத்தகைய போலிச் செய்திகள் வெளியிடப்படுவது மிகவும் வருந்தத்தக்கது.

இந்தப் பின்னணியில்தான் கௌரவ முன்னாள் ஆளுநர் ஒருவரது குற்றச்சாட்டுக்களும் உள்ளன. அவருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர் தனது கருத்துக்களை வெளியிட்டிருக்க முடியும்.

கௌரவ முன்னாள் ஆளுநரது குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையுமில்லை என்பதைத் தெரிவிக்கின்றேன். இக்குற்றச்சாட்டுக்கள் சமூக மட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியது. ஆதலால் அக்குற்றச்சாட்டுகளுக்கான பதில்களை வழங்குவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

கல்விசார் நேர்மைத்தன்மை

எனது கல்விசார் நேர்மைத் தன்மை தொடர்பில் சில குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். எனது கல்விசார் விடயங்களில் எனக்கு மிகுந்த நம்பிக்கையிருக்கிறது. எனது முதுதத்துவமாணி ஆய்வேடு, ஆய்வுச் சுருக்கம், ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர்.

முதுதத்துவமாணி ஆய்வேட்டின் ஓரிரு பக்கங்களை எடுத்துக்கொண்டு அவை பிரதிசெய்யப்பட்டது என்கின்றனர். பிரதியீடு செய்யப்படுவது தொடர்பில் சில நெறிமுறைகள் உலகளாவிய ரீதியாகக் காணப்படுகிறது. அந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டே எனது ஆய்வேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனது ஆய்வேடு 2008-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக சமூகவியல் கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

சமூக ரீதியிலும் பிராந்திய அடிப்படையிலும் மிகவும் பெறுமதிவாய்ந்த ஆய்வாக அது உள்ளது.

ஒரு பல்கலைக்கழக மேற்பார்வையாளரின் கீழ் எனது ஆய்வேடு தயாரிக்கப்பட்டது. எனது ஆய்வேட்டினை இரு பரீட்சகர்கள் மீளாய்வு செய்து அதன் தரத்தினை மதிப்பிட்டுள்ளனர். எனது ஆய்வேட்டில் சுமார் 40000 இற்கு மேற்பட்ட சொற்கள் உள்ளன. அவற்றுள் சில நூறு சொற்களை வைத்துக்கொண்டு வேண்டுமென்றே குற்றம்சாட்டுகின்றனர்.

சமூக விஞ்ஞான ஆய்வுகளில் ஒரு குறிப்பிட்ட அளவான பிரதியீட்டிற்கு அனுமதியுள்ளது. உலகளாவிய ரீதியாக உள்ள நியமங்களை நீங்கள் பார்க்கமுடியும். இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டே எனது ஆய்வேடு தயாரிக்கப்பட்டது. அதேவேளை, ஒரு கட்டுரைச் சுருக்கம் தொடர்பாகவும் விமர்சிக்கின்றனர். ஒரு கட்டுரையில் மிக மிக சிறிய பகுதியே சுருக்கம்.

ஆய்வுச் சுருக்கத்தில் ஒரு சில வசனங்களில் ஒருமைத் தன்மை காணப்படுவதனை குற்றமாகக் கருதுகின்றனர். சில வசனங்கள் ஆய்வாளர்களிடையே ஒத்துப்போவது உண்டு. அது அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மீறாத வரையில் குற்றமாகக் கருதப்படுவதில்லை. பல ஆய்வாளர்கள் சேர்ந்து மேற்கொண்ட ஆய்வின் சுருக்கமே அது.

ஆய்வின் 99% பகுதியினை விடுத்து சில வசனங்களின் ஒத்த தன்மையினைக்கொண்டு குற்றம்சாட்டுகின்றனர். ஏனைய கட்டுரைகள் தொடர்பில் போலியாக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். குறித்த குற்றச்சாட்டுக்களுக்கும் என்னைப் பதவி விலக்கக் கோருவதற்கும் சட்டத்தில் எந்த இடமுமில்லை.

சட்டத்தின் வாயிலாக எதிர்கொள்ளமுடியாதவர்கள் இழுக்கினை ஏற்படுத்துவதற்காக இதனைச் செய்கின்றனர். நேர்முகத் தேர்வில் ஒருவருக்கு அநீதியிழைக்கப்பட்டால் அவர் நீதிமன்றத்தினை நாடமுடியும். பல்கலைக்கழகத்தில் உள்ள ஒருவருக்கு அநீதியிழைக்கப்பட்டால் அவரும் நீதிமன்றத்தினை நாடமுடியும்.

ஆனால் அத்தகையோர் சட்டத்தினூடாக பரிகாரம் தேடுவதனை விடுத்து, சமூக ஊடகங்களில் எழுதுகின்றனர். இதிலிருந்து இந்தச் செய்திகளின் உண்மைத் தன்மையினைப் புரிந்துகொள்ளமுடியும். எனது ஆய்வுகள் வலைத்தளத்தில் காணக்கிடக்கின்றது. அனைவரும் அதனை எடுத்துப் படிக்கமுடியும்.

சட்டரீதியற்ற பதவியுயர்வுகள்

எனது பதவிக்காலத்தில் வழங்கப்பட்ட பதவியுயர்வுகள் சுற்றுநிருபங்களுக்கு உட்பட்டே வழங்கப்பட்டுள்ளன. பதவியுயர்வினை வழங்குவதில் நீண்ட நடைமுறை காணப்படுகின்றது. பேராசிரியர் பதவியுயர்வு முறையில் ஒருவர் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பது முதலாவது படிமுறை. குறித்த விண்ணப்படும் தொடர்பில் மூதவைக்கு அறிவிக்கப்படும். மூதவை குறித்த விண்ணப்பத்தில் உள்ள விடயங்களை மீளாய்வதற்கானவர்களை பிரேரிக்கும்.

பல்கலைக்கழக மூதவையில் மீளாய்வு அங்கத்தவர்கள் பிரேரிக்கப்படுவர். அது மிகவும் வெளிப்படையானது. மூதவை உறுப்பினர்களது ஒரு கருத்தின் அடிப்படையில் மீளாய்வாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். மீளாய்வு செய்பவரில் மூதவைக்கு நம்பிக்கை இல்லையெனில் மூதவை ஆட்சேபனைகளை தெரிவிக்கமுடியும். பின்னர் விண்ணப்பங்கள் அடங்கிய ஆவணம் குறித்த பீடத்தில் 30 நாட்கள் வைக்கப்படும்.

30 நாட்களில் குறித்த விண்ணப்பத்தினை கல்வியியலாளர்கள் பார்வையிட அனுமதியளிக்கப்படும். கல்வியியலாளர்கள் விண்ணப்பத்தினை பார்வையிட்டு தமது ஆட்சேபனைகளை அனுப்பமுடியும். 30 நாட்களுக்கு பின்னர் விண்ணப்பம் மீளாய்வுக்கு அனுப்பப்படும். விண்ணப்பத்தில் உள்ள ஆய்வு விடயங்கள் தொடர்பிலான பரிசீலனையினை 02 புலமையாளர்கள் மேற்கொள்வர்.

அவர்கள் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப தமது புள்ளியினையிட்டு அறிக்கையினை சமர்ப்பிப்பர். இருவரது அறிக்கைகளும் கிடைக்கப்பெற்றதன் பிற்பாடு இறுதி தெரிவுக்குழு கூட்டப்படும்.

இறுதித் தெரிவுக்குழுவில் உள்ளவர்கள்

உபவேந்தர்

பீடாதிபதி

பதிவாளர்

துறைத்தலைவர்

மூதவை நியமனம் செய்யப்பட்ட இருவர்

பேரவை உறுப்பினர் இருவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இருவர்

தெரிவுக்குழு முன்னிலையில் விண்ணப்பதாரி நேர்முகத் தேர்வினை எதிர்கொள்வார். இறுதியிலையே அனைத்து உறுப்பினர்களதும் ஏகோபித்த தீர்மானம் பெறப்படும். ஒருமித்த கருத்தின் அடிப்படையிலையே பதவியுயர்வு தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுகிறது. இத்தெரிவின்போது தெரிவுக்குழுவில் ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு முழுச்சுதந்திரம் உள்ளது. தெரிவுக் குழுவின் முடிவு மீண்டும் பேரவைக்குப் பரிந்துரை செய்யப்படும்.

(தொடர்ச்சி 23 பக்கம்)

# கிளிநொச்சியில் துப்பாக்கிச் சூடு–ஒருவர் படுகாயம்



கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் புதன் (28) அதிகாலை இடம் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

உதயநகரில் வசிக்கும் ஒருவர் காரில் பயணித்துக்கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடாத்தியுள்ளனர்.

இதே நேரம் குறித்த துப்பாக்கிச் சூட்டிற்கான காரணமோ அல்லது துப்பாக்கிச் சூட்டை நடாத்தியவர்களோ மாலை வரை இனம் காணப்படவில்லை என்று பொலிஸ் தரப்பு கூறுகிறது.

இதனிடையே இரு பிரிவினரிடையே ஏற்பட்ட முரண்பாடே இச்சூட்டுச் சம்பவத்திற்கு காரணம் எனவும் சூட்டுச் சம்பவத்திற்கு உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருவதுடன் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மை காலங்களில் வடக்கு மாகாணத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது என்று மக்கள் விசனமடைந்துள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சிப் பகுதியிலேயே மக்களை அச்சுறுத்தும் வகையில் இப்படியான செயல்கள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

# வவுனியாவில் சீனித் தொழிற்சாலைக்கு 72 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்க அனுமதி

**- எமது யாழ் செய்தியாளர்**



சீனாவிற்கான கரும்புச் செய்கைக்காக வவுனியா மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்குவதற்கான அனுமதியை கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தினை தேசிய முதலீட்டுச் சபையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவே அமைச்சரவைக்கு நேரடியாகச் சமர்ப்பித்தார்.

தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சீனவின் முதலீட்டாளர்களின் ஓர் சீனி உற்பத்தி தொழிற்சாலையான sutech தொழிற்சாலையை வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நயினாமடுவில் 492 ஏக்கர் அல்லது 200 கெக்டேயர் நிலப்பரப்பில் அமைக்கவும் அங்கு சீனி உற்பத்திற்கு தேவையான கரும்புச் செய்கைக்கு 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தை முதல்கட்டமாக அந்த தொழிற்சாலைக்கு வழங்கவுமே அன்றைய அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த தொழிற்சாலையின் கரும்புச் செய்கைக்கு வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும் நிலம் வழங்கப்படுவதோடு அயல் மாவட்டங்களிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களிற்கு என்னும் பெயரில் மேலும் 42 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கவும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுமே அதிக நிலங்கள் வழஙகப்படவுள்ளதோடு அயல் மாவட்டமான முல்லைத்தீவிலும் குறிப்பிட்டளவு நிலமும் இதற்குள் உள் வாங்கப்படவுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கான நில விநியோகம் தொடர்பிலேயே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதனும் ரெலோவின் பேச்சாளரான சுரேன் குருசாமியும் ஜனாதிபதியை தனியாகச் சந்தித்ததோடு இந்த சீனி உற்பத்தி தொழிற்சாலைப் பிரதிநிதிகள், தேசிய முதலீட்டுச் சபையின் பிரதிநிதிகள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே 18ஆம் திகதி மேற்கொண்ட இரகசிய கலந்துரையாடலிலும் ரெலோவின் சுரேன் குருசாமியும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இலங்கை-சீனா நட்புறவு அமைப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையில் சீனா சென்றுள்ளனர். அந்த குழுவில் செல்வம் அடைக்கலநாதமும் இடம்பெற்றுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

# வடக்கில் நிலங்களின் வரைபடங்களை தயாரிக்க அரசு முடிவு

வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் ஆளுகையில் 1985ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலங்களை வரைபடம் தயாரிக்க இலங்கை அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட போரின் காரணமாக வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களிலும் அதனை அண்டிய மாவட்டங்களிலும் பலர் நீண்ட காலமாக இடம்பெயர்ந்த சமயம் அந்த இடங்களில் மரங்கள் அடர்ந்து வளர்ந்து காடுகள் போல் காட்சியளிக்க ஆரம்பித்துவிட்டன.

இதையடுத்து அவ்வாறு காணப்பட்ட பகுதிகளும் வனப் பகுதி எனவும் வன உயிரினங்களின் பகுதியாகவும் அரச இதழ் வெளியிடப்பட்டுவிட்டன. இதன் காரணமாக பொதுமக்களின் வாழ்வு பெருமளவிற்கு பாதிக்கப்பட்டது.

அந்த பகுதிகள் வனவள திணைக்களத்திற்கு உட்படவை என்று கூறப்பட்ட காரணத்தால் மக்கள் அந்தப் பகுதிகளிற்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து குரல்கொடுத்தாலும் அரசு கவனம் செலுத்தாத நிலையே காணப்பட்டது.

எனினும், இவ்வாறு காணப்படும் பகுதிகளை அடுத்த 6 மாத காலத்திற்குள் அதாவது இந்தாண்டு இறுதிக்குள், பகுதி பகுதியாக விடுவிக்கும் நோக்கில் விரைவில் அப்பகுதிகளை இனம் காணும் ஏற்பாடாக வரைபடம் தயாரித்து விடுவிப்பதற்கான ஒப்புதல் வன வளம் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியானல் சமர்ப்பிக்கப்பட்ட விடயத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கில் இன்னும் பொதுமக்களின் காணிகள் உட்பட இராணுவம் மற்றும் இதர திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் பினாமி நிறுவனங்களே அட்டைப் பண்ணைகள் என 'மெசிடோ' நிறுவனம் தெரிவிப்பு

**- நடராசா லோகதயாளன்**



கடல் அட்டை பண்ணைகளுக்காக வடக்கு கடலின் ஆழம் குறைந்த பகுதிகளை சீனாவின் பினாமி நிறுவனங்கள் ஆக்கிரமிக்குமானால் எதிர்கால சந்ததியினருக்கு மீன்களை கண்காட்சி நிகழ்வுகளில் தான் காட்ட முடியும் என "மெசிடோ" நிறுவனத்தின் உத்தியோத்தார் விவேகி தெரிவித்தார்.

அண்மையில் உலக வங்கியின் அறிக்கை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் கடத்தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் கூட்டம் ஒன்றில் பங்குபெற்று கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கில் வளமான கடற் பகுதிகளில் கடல் வேளாண்மை என்ற பெயரில் கடல் அட்டை பண்ணைகள் விரிவுபடுத்தப்படுகிறது. பாரம்பரியமாக கடற்தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் மாற்றுத் தொழில்களுக்கு செல்ல வேண்டிய துப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

மேலும் மீன இனங்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாத அளவுக்கு கடலானது சேற்றுக் கடலாக மாற்றும் நிலையில் எமது எதிர்கால சந்ததியினருக்கு மீன் இனங்களை காட்ட முடியாத சூழ்நிலை உருவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"தற்போது அலங்கார மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்படும் நிலையில் நாம் பாரம்பரியமாக கடல் உணவாக உண்டு வந்த மீன்களை மீன் கண்காட்சிகளில் தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படப்போகிறது".

கடும் பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதார சிக்கலிலுள்ள மக்கள் கோழித்தீவனத்தை உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்கிறார் விவேகி.

"மீன் உற்பத்திக்கு கருவாட்டு உற்பத்திக்கு பெயர் போன மன்னார் மாவட்டத்தில் கோழிகளுக்கு உணவாக போடுகின்ற மண்டத்திரலி மற்றும் செங்கன்னியை உணவு தேவைக்காக இன்று மக்கள் பயன்படுத்துகின்றனர்".

அது மட்டுமல்லாது சீனாவில் இருந்து பிளாஸ்டிக் முட்டைகள் இறக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் சீனா செயற்கை மீன்களையும் உணவுக்காக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது.

"வடக்கில் இயற்கையாகக் மீன் இனங்கள் கிடைக்கும் கடற் பகுதிகளை ஆக்கிரமித்து தனது நாட்டுக்கு தேவையான அட்டைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நிலையில் எமது மக்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை உணவாக உட்கொள்கின்றனர்.

இயற்கை நீரோட்டங்களை மறித்து கடல் அட்டைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதால் மீன் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ள நிலையில் பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஆடம்பர விடுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது" என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே வடபகுதியில் மட்டுமல்ல இலங்கையிலும் யாரும் உணவு தேவைக்காக பயன்படுத்தாத கடல் அட்டையை டொலரைப் பெறப் போகுறோம் எனக் கூறி அந்நிய நாட்டவர்களுக்கு எமது கடல் வளத்தை அழிக்க இடம் கொடுக்க கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு கடல் சீனாவிற்கு ஏலம் விடப்படுகின்றது என உள்ளூர் மீனவ அமைப்புக்கள் சிலவும் கடல் சார் ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் உள்ளிட்டவர்கள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டிவருவதோடு இதனை தடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது மட்டுமன்றி கடல் அட்டைப் பண்ணைகளும் இறால் பண்ணைகளும் பெரும் செல்வந்தர்களால் நடாத்தப்படுவதோடு மீனவர்கள் கூலித் தொழிலாளர்களாக மாற்றப்படுகின்றனர் எனவும் எமது வளம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும்போது அந்நியச் செலவாணியை ஈட்டுவதாக கூறினாலும் அதேவகையான கருவாடு, சமன் ரின் போன்றவற்றை இறக்குமதி செய்ய இதனைவிட அதிக பணம் செலவிடப்படுவதனை அமைச்சின் அதிகாரிகள் மறைப்பதாகவும் குற்றஞ் சாட்டிவரும் நிலையில் தற்போது மற்றுமோர் அமைப்பு இந்தக் குற்றச் சாட்டை முன் வைப்பதும் குறிப்பிடத்தக்கது.




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

கனடிய செய்திகள் Canadian News

# கனடா வாழ் எழுத்தாளரும் அரசியல் செயற்பாட்டாளருமான நக்கீரன் – வேலுப்பிள்ளை தங்கவேலு அவர்களுக்கு எடுக்கப்பெற்ற பெரும் விழா

கனடா வாழ் எழுத்தாளரும் அரசியல் செயற்பாட்டாளருமான நக்கீரன் என்னும் புனைபெயர் கொண்ட வேலுப்பிள்ளை தங்கவேலு அவர்களின் சமூகம், அரசியல், இலக்கியம் போன்ற துறைகளில் ஆற்றிய பணிகளைப் பாராட்டியும்,



மதிப்பளித்தும் கடந்த 24/06/2023 சனிக்கிழமை அன்று தமிழ் இசைக் கலாமன்ற மண்டபத்தில் பெரும் விழா ஒன்று எடுக்கப்பெற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திரு வின் மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவை பிரபல தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவிப்பாளர் நாதன் வீரபாகு அவர்கள் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

பேராசிரியர்கள் சந்திரகாந்தன், பாலசுந்தரம் மற்றும் திருவாளர்கள்குணநாதன், சாமி அப்பாத்துரை, வின் மகாலிங்கம், மைதிலி வில்சன், நிமால், வீர சுப்பிரமணியம், சிவன் இளங்கோ மற்றும் அன்பரசி, யுவனித்தா நாதன்ஆகிய பல்வேறு பிரமுகர்கள் இவ்விழாவில் நக்கீரன் அவர்கள் தொடர்பான பாராட்டுரைகளை வழங்கினார்கள்.

விழாவில் ”பன்முகப் பேராளுமை நக்கீரன்” என்ற நூலும் வெளியிடப்பட்டது.

அந்த நூலில் முனைவர் புஷ்பவனம் குப்புசாமி (இந்தியா), பேராசிரியர்கள் சந்திரகாந்தன், பாலசுந்தரம், மற்றும் சம்பந்தன், சுமந்திரன் எம். பி உட்பட்ட அரசியற் பிரமுகர்கள், துறைசார் அறிஞர்கள், அவரது நண்பர்கள்,அவரது மகள் எனப் பலரும் நக்கீரன் குறித்து எழுதியுள்ளார்கள்.


நக்கீரன் அவர்கள் தனது குடும்பத்துக்குச் செலவழித்த நேரத்தையும் விட அரசியல், சமூகம், இலக்கியப் பணிகளுக்குச் செலவிட்ட நேரம் அதிகமானது. 90 வயதைத் தாண்டியும் தற்போதும் அந்தப் பணியை அவர் தொடர்கிறார் என்று பலரும் தங்கள் உரைகளில் குறிப்பிடத்தவறவில்லை.


கலை நிகழ்ச்சிகளும் விழாவின் உரைகளுக்கு இடையில் இடம்பெற்று சபையோரை மகிழ்வித்தன.













மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்துத் திருக்கோயில்கள் 1054

## சங்கானை அரசடி வைரவர் ஆலயம் சங்கானை, யாழ்ப்பாணம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி வடிவினரான சிவபெருமானை, முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். சைவத்தின் சின்னங்களையும், வழிபாட்டு முறைகளையும் பழம்பெரும் நாகரீகமாகக் கருதும், சிந்துவெளிநாகரிகக் கண்டுபிடிப்புக்களின் மூலம் அறிய முடிகின்றது. இதன்மூலம் சைவத்தின் தொன்மையையும், பெருமையையும் அனைவரும் அறிந்து கொள்ளலாம். அக்காலத்தில் இயற்கையோடிணைந்த வழிபாடாகக் காணப்பட்ட சைவம், காலப்போக்கில் முதிர்ச்சி பெற்ற மதமாக மாறியுள்ளது. கோவில், கோபுரம், ஆகம, வைதீக கிரியைமுறைகள், திருவிழாக்கள், திருமுறை, சைவசித்தாந்தம், கலைகள், சைவத்தின் தத்துவவிளக்கவெளிப்பாடுகள் என, பல துறைகளிலும் தனித்துவமான தன்மைகளைக் கொண்டுள்ளதோடு, மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற வாழ்வுநெறிகளையும், தன்னகத்தே கொண்ட நெறியாக விளங்குவது சைவம் எனின் மிகையாகாது. ஆரம்பத்தில் சைவத்திற்குச் சனாதனதர்மம் என்ற பெயரே காணப்பட்டுள்ளது. இதற்கு நிலையான நீதிநெறிமுறை எனப் பொருள் கொள்வர். மக்களைச் செம்மையான முறையில், சமூக உணர்வோடு, வாழ்வாங்கு வாழ்வாற்கு உதவுகின்ற நெறியாகவும், அம்மனிதர்களைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி, மனித நிலையினின்றும் தெய்வீக நிலைக்கு உயர்த்த உதவும் உயர்ந்த நெறியாகவும் சைவம் விளங்குகின்றது.

ஆத்திக, நாத்திகக் கொள்கைகள் மனித மனதிலே காணப்பட்டபோதிலும், கடவுள் ஒருவர் உண்டென்பதை நாள்தோறும் நிகழும் செயல்களை அவதானிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். மனிதனின் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட நிலையில், இயற்கை நியதி செயற்பட்டு உலக நிகழ்வை ஒருங்குபடுத்தி வருவது கண்கூடு. நம்பிக்கையும், அன்பும் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இயங்க ஆதாரமாயுள்ளது. இவற்றை நமக்கு அளிப்பனவாகக் காணப்படுபவை திருக்கோயில்கள். திருக்கோயில்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை அகத்தாலும், புறத்தாலும் கண்டு, மனங்குளிர்ந்து எமது துன்பங்களை மறந்து நலம் பெறுவதற்குத் திருக்கோயில்களும், வழிபாட்டு முறைகளும் ஆதாரமாயுள்ளன. இத்தகைய திருக்கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. தாம் விரும்பிய வடிவங்களிலே தெய்வங்களைக் கண்டு வழிபடும் மரபினைத் தமிழர்கள் பண்டு தொட்டு இன்றுவரை பேணி வருகின்றனர்.

சிவனின் அறுபத்திநான்கு திருக்கோலங்களுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், வைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, பிட்சாடணமூர்த்தி ஆகிய ஒன்பது மூர்த்திகளை வணங்குவதே மரபாகக் காணப்படுகின்றது. இவ்வடிவங்களுள் இலிங்க வடிவம் மட்டுமே கருவறைக்குள் நிறுவப்படுவது வழக்கம். எனினும் வீரபத்திரர், பைரவர் ஆகியோரின் உருவத்திருமேனிகளையும் கருவறைக்குள் நிறுவி வழிபடுவது, சைவ வழிபாட்டின் முதிர்ச்சி நிலையைக் காட்டுவதாகக் காணப்படுகின்றது. இந்தவகையிலே இலிங்கம், வீரபத்திரர், பைரவர் ஆகிய மூன்று சிவவடிவங்களும் தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன.

மும்மூர்த்திகளாகப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் கருதப்படுகின்றனர். இவர்களுள் படைத்தல் தொழிலைப் புரிந்துவரும் பிரம்மதேவனுக்கு அவதாரம் கிடையாது காத்தற் கடவுளாகிய விஷ்ணுபகவானுக்கு மாத்திரமே அவதாரங்கள் உண்டு. சிவனுக்கு அவருடைய அம்சமாக அவதாரம் கிடையாது. ஆனால், அவருடைய சக்தியினால் சிவ அம்சமான வீரபத்திரர், காலபைரவர் போன்ற பல சொரூபங்கள் காணப்படுகின்றன. இவர்களை அவதாரங்களாகக் கருதாது, சிவகணங்களிலே, சிவமூர்த்தங்களிலே சேர்ப்பதே மரபாகக் காணப்படுகின்றது.

சிவாம்சமாகக் கருதப்படும் வைரவர் ஆலயம் சங்கானைப்பிரதேசத்தில் அரசடி வைரவர் என்ற பெயருடன் புகழ் பெற்று விளங்குகின்றது. இப்பிதேசத்தின் காவல் தெய்வமாக மக்கள் இவரைப் போற்றி வணங்கி வருகின்றனர்.

- வளரும்...



# புதுச்சேரிப் பேராசிரியர் மு. இளங்கோவனுக்குத் தமிழ்விக்கி — தூரன் விருது




புதுவை அரசின் காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் மு. இளங்கோவனுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ்விக்கி - தூரன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருது ரூபாய் இரண்டு இலட்சம் பரிசுத்தொகை, சிற்பம், சான்றிதழ் கொண்டது.

கடந்த முப்பதாண்டுகளில் ஒரு கல்வியாளராகவும் ஆய்வாளராகவும் மு. இளங்கோவன் ஆற்றியுள்ள பணிகள் மிக விரிவானவை. தமிழியக்கம் சார்ந்த அணுகுமுறை கொண்டவர் இவர். பாரதிதாசன் பெருமையை வெளிப்படுத்த வெளிவந்த பொன்னி இதழ்களை மீட்டுத் தொகுத்தவர். தமிழறிஞர்களின் வாழ்க்கையினைத் தேடித்தேடி ஆவணப்படுத்தியவர். இசைத்தமிழ் ஆய்வாளர்களை ஆவணப்படுத்தியவர். இவர் உருவாக்கிய பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார் ஆவணப்படம், விபுலாநந்த அடிகளார் ஆவணப்படம் உலக அளவில் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும். கணினித்தமிழைப் பரவலாக்கியவர். தொல்காப்பிய ஆய்வுகளை முன்னெடுத்தவர். இணையத்தில் இவர் எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரைகள் ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமாக அமைந்து, இணையப் பயன்பாட்டாளர்களுக்கு உதவி வருகின்றன.

தமிழ் விக்கி இணையக் கலைக்களஞ்சியம் (https://tamil.wiki/wiki/) சார்பில், பெரியசாமித் தூரன் நினைவாக, ஆண்டுதோறும் தமிழ்விக்கி தூரன் விருது வழங்கப்படுகிறது. தமிழ் கலைக்களஞ்சியத்தை உருவாக்கிய மேதையான பெரியசாமித் தூரனின் பங்களிப்பைப் போற்றும் முகமாக இவ்விருது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விருது விழா ஆகஸ்டு மாதம் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் ஈரோட்டில் முழுநாள் நிகழ்வாக நடைபெறும் என்றும் இந்த விழாவில் மு.இளங்கோவனுக்கு விருது வழங்கப்படும் என்றும் எழுத்தாளர் ஜெயமோகன் தம் இணையதளத்தில் அறிவித்துள்ளார்.

இந்தியக் குடியரசுத் தலைவரின் செம்மொழி இளம் அறிஞர் விருது, சிக்காகோ தமிழ்ச் சங்கத்தின் விருது, தமிழக அரசின் ஊடகத் தமிழ் விருது உள்ளிட்ட விருதுகளை இதற்கு முன்பாக இவர் பெற்றுள்ளார்.

https://www.jeyamohan.in/184670/



சினிமா

# 50வது படத்தில் பிரபல நடிகருக்கு வில்லனாகும் சிம்பு

பத்து தல படத்தின் வெற்றிக்கு பிறகு சிம்பு, "கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்" படத்தின் இயக்குனர் தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் "எஸ்.டி.ஆர். 48" படத்தில் நடிக்கிறார். இப்படத்தை கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனமும் மகேந்திரனும் இணைந்து தயாரிக்கின்றனர். இப்படத்தின் அறிவிப்பு சமீபத்தில் வெளியாகி ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. 2024-ஆம் ஆண்டு வெளியாகவுள்ள இப்படத்தின் பணிகளில் படக்குழு தீவிரம் காட்டி வருகிறது. இப்படத்திற்கு பிறகு சிம்பு, வேல்ஸ் இண்டர்னேஷ்னல் நிறுவனம் தயரிக்கும் படத்தில் நடிக்கிறார். இதற்கு பிறகு சிம்புவின் 50வது படத்தை இயக்குனர் மணிரத்னம் இயக்கவுள்ளதாகவும் இதனை கமலின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிப்பதாக கூறப்பட்டது. தற்போதைய தகவல்ப்படி மணிரத்னம் இயக்கத்தில் கமல் நடிக்கும் அவரது 234 வது படத்தில் சிம்பு நடிக்கவுள்ளதாகவும், இந்த படமே சிம்புவுக்கு 50வது படம் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் சிம்பு இப்படத்தில் கமலுக்கு வில்லனாக நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. தனது 50வது படத்தில் சிம்பு வில்லனாக நடிக்கயிருப்பது ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# மாமன்னன் குறித்து தனுஷ் நெகிழ்ச்சி



பரியேறும் பெருமாள், கர்ணன் படங்களை இயக்கிய மாரி செல்வராஜ் தற்போது "மாமன்னன்" படத்தை இயக்கியுள்ளார். இதில் உதயநிதி ஸ்டாலின், வடிவேலு, ஃபகத் பாசில், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள இப்படத்தை ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில் படத்தை வெளியிடும் பணிகளில் படக்குழு தீவிரம் காட்டி வருகிறது. சமீபத்தில் "மாமன்னன்" படத்துக்கு தணிக்கை குழுவால் யு/ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது. இந்நிலையில், "மாமன்னன்" படம் குறித்து நடிகர் தனுஷ் நெகிழ்ச்சி பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "மாரி செல்வராஜின் மாமன்னன் உணர்ச்சிபூர்வமானது. வடிவேலு சார் மற்றும் உதயநிதி ஸ்டாலின் உறுதியான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். பகத் ஃபாசில் மற்றும் கீர்த்தி சுரேஷ் திறமையான நடிப்பை கொடுத்துள்ளனர். இடைவேளை காட்சிகள் சரவெடியாக இருக்கும். இறுதியாக ஏ.ஆர். ரகுமான் இசை மிகவும் அழகாக உள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# இயக்குநர் ஷங்கருக்கு விலை உயர்ந்த கைக்கடிகாரத்தை வழங்கிய நடிகர் கமல்ஹாசன்



இயக்குநர் ஷங்கருக்கு விலை உயர்ந்த கைக்கடிகாரத்தை அன்பளிப்பாக வழங்கி நடிகர் கமல்ஹாசன் வாழ்த்தியுள்ளார்.

இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் தற்போது இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்து வருகிறார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு பல்வேறு கட்டங்களாக விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதையடுத்து இந்தியன் 2 படத்தில் கமலுக்கு வில்லனாக நடிகரும் இயக்குனருமான எஸ்.ஜே. சூர்யா நடித்துள்ளதாக நடிக்கவுள்ளதாகவும் இப்படத்தில் எஸ்.ஜே. சூர்யா காட்சிகள் நிறைவு செய்துவிட்டதாகவும் கூறப்பட்டது. இன்னும் சில நாட்கள் மட்டுமே படப்பிடிப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இயக்குநர் ஷங்கருக்கு விலை உயர்ந்த வாட்ச்-ஐ அன்பளிப்பாக வழங்கி நடிகர் கமல்ஹாசன் வாழ்த்தியுள்ளார். இது குறித்து காமல்ஹாசன் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியன் 2" படத்தின் பிரதான காட்சிகளை பார்த்தேன். என் உளமார்ந்த வாழ்த்துகள் இயக்குனர் ஷங்கர். இதுவே உங்கள் உச்சமாக இருக்கக் கூடாது என்பதும் என் அவா. காரணம், இதுதான் உங்கள் கலை வாழ்வின் மிக உயரமான நிலை. இதையே உச்சமாகக் கொள்ளாமல் திமிறி எழுங்கள். பல புதிய உயரங்கள் தேடி. என தெரிவித்துள்ளார்.

# உலகத்தின் மிகப்பெரிய பிரச்சினையே பார்க்கிங் தான்.. ஹரிஷ் கல்யாண் பதிவு



பொறியாளன், வில் அம்பு, பியார் பிரேமா காதல், தாராள பிரபு உள்ளிட்ட பல படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் ஹரிஷ் கல்யாண் இவர் தற்போது ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கும் "பார்க்கிங்" படத்தில் நடிக்கிறார். திரில்லர் ட்ராமாவான "பார்க்கிங்" திரைப்படத்தை "பலூன்" பட இயக்குனர் கே.எஸ்.சினிஷ், சோல்ஜர்ஸ் ஃபேக்டரி சார்பில் தயாரிக்கிறார்.

மேலும் பேஷன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கிறது. இப்படத்தின் கதாநாயகியாக இந்துஜா நடிக்கிறார். மேலும் எம்.எஸ்.பாஸ்கர், ராம ராஜேந்திரன், பிரார்த்தனா நாதன், இளவரசு உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைக்க, ஜிஜு சன்னி ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் முழு படப்பிடிப்பும் சென்னையில் நடைபெற்று வரும் நிலையில், விரைவில் படப்பிடிப்பு நிறைவடைகிறது. இந்நிலையில், இப்படத்தின் புதிய பதாகையை படக்குழு வெளியிட்டுள்ளது. இதனை தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள நடிகர் ஹரிஷ் கல்யாண், "இரண்டு குடும்பம். ஒரு பார்க்கிங். உலக பிரச்சினை" என்று பதிவிட்டுள்ளார்.

(18 பக்கத் தொர்ச்சி)

பேரவையிலும் குறித்த பரிந்துரை தொடர்பாக ஆட்சேபனைகளைத் தெரிவிக்கமுடியும். இறுதியாக பேரவை அனுமதியுடன் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறாக ஒவ்வொரு பதவியுயர்வுக்கும் ஒரு நீண்ட நடைமுறை உள்ளது. பதவியுயர்வுகள் ஓரிரு நாட்களில் வழங்கப்படுவதில்லை. பல மாதங்களாக அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டே பதவியுயர்கள் வழங்கப்படுகின்றன. எனவே பதவியுயர்வு என்பது இரவோடு இரவாக தனியாக உபவேந்தர் மட்டும் செய்கின்ற விடயமல்ல.

பல்கலைக்கழகத்தில் பதவியுயர்களை வழங்கும்போது நண்பர்கள், நண்பர் அல்லாதவர்கள் என்று பார்ப்பதில்லை. பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் பல பதவியுயர்கள் இடம்பெறுகின்றது. பதவியுயர்வுகள் வழங்குவது பல்கலைக்கழகத்தில் ஒரு வழக்கமான நடைமுறையாக உள்ளது. எனது காலத்தில் சட்டத்திற்கு உட்பட்டு, பேரவை அனுமதியுடனையே பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் பதவியுயர்வுக்கு இந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது. சுற்றுநிருபங்களுக்கு அப்பால் சென்று பதவியுயர்வுகளை வழங்கமுடியாது. அதற்கு எனது அதிகாரிகள் என்னை இடமளிக்கப்போவதில்லை.

பக்கச்சார்பான பதவி நியமனங்கள் பதவியுயர்வுக்குப் பின்பற்றப்படுவதுபோன்று சில சட்ட நடைமுறைகள் நியமனத்திற்கும் உண்டு. விண்ணப்பங்கள் தேசியப் பத்திரிகைகளில் கோரப்பட்டு, விண்ணப்பதாரிகளிடமிருந்து பெறப்படுகின்றன. விண்ணப்பங்கள் உரிய துறைத்தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும். அவர்களது அவதானங்களைப் பெற்றதன் பின்னர் நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் அனுப்பப்டும்.

நேர்முகத் தேர்வுக் குழுவில் உபவேந்தர் தலைமையில்
குறித்த பீடத்தின் பீடாதிபதி
குறித்த துறையின் தலைவர்
மூதவை உறுப்பினர்
பேரவை உறுப்பினர்
பதிவாளர் அடங்கிய குழு

மேற்குறிப்பிட்ட தெரிவுக்குழு விண்ணப்பதாரிகளை நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தும். நேர்முகத் தேர்வில் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தெரிவுக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக புள்ளிகளை இடுவர். பின்னர் மொத்தப் புள்ளிகளும் கணக்கிடப்பட்டு முதல் இடங்களைப் பெறுபவர் தெரிவுசெய்யப்படுவர். அத்தகைய குழு ரீதியான தெரிவின் மூலமே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நியமனங்களையும் பல்கலைக்கழகப் பேரவை அங்கீகரிக்க வேண்டும். என்னால் வழங்கப்பட்ட எந்த நியமனங்களிலும் நான் பக்கச்சார்பாக செயற்படவில்லை.

வழங்கப்பட்ட நியமனங்கள் அனைத்தும் குறித்த துறைகளின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப இடம்பெற்றுள்ளன. நேர்முகத் தேர்வில் பங்குபற்றியவர்களுள் தகுதியானவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தோல்வியுற்றவர்கள் தெரிவுக் குழுவின் முடிவில் திருப்தியுறாதபோது நீதிமன்றத்தினை நாடமுடியும். நீதிமன்றத்தினை நாடி குறித்த பதவிகளை மீளப்பெற்ற நிகழ்வுகளும் இலங்கையில் இடம்பெற்றுள்ளன. நான் பக்கச்சார்பாக செயற்பட்டிருந்தால் அதனை நீதிமன்றத்தில் நிரூபிக்கமுடியும். அதனை விடுத்து ஊடகங்களில் கருத்துக்களை பரப்புரை செய்வது தவறான நடைமுறையாகும். உபவேந்தர் என்ற அடிப்படையில் சட்டத்திற்கு உட்பட்டே நான் செயற்பட முடியும்.

வழங்கப்பட்ட நியமனங்கள் தொடர்பில் திருப்தி இல்லை என்றால் சட்டத்தினை அணுகி இருக்கமுடியும். பக்கச்சார்பான நியமனங்கள் என்ற கதை நேர்முகத் தேர்வில் தோல்வியுற்றவர்களது வாதம் மட்டுமே.

அதில் எந்தவிதமான பக்கச்சார்புகளும் இடம்பெறவில்லை. தெரிவு செய்யப்பட்டவர்கள், தெரிவு செய்யப்படாத அனைவரது ஆவணங்களும் உள்ளன. தேவையானவர்கள் அவற்றினை சட்ட நெறிமுறைகளினூடாகப் பார்வையிடமுடியும். அதில் எந்தவித ஒழிவு மறைவுகளும் இல்லை.

குறித்த நபர்கள் நீதிமன்றத்தினை அனுகி தோல்வியுற்றதன் பின்னரே போலிப் பிரச்சாரங்களைத் தொடுத்துள்ளனர். நான் வழங்கிய நியமனங்கள் எவற்றிலும் முறைகேடாக நடந்துகொள்ளவில்லை. அத்தகைய முறைகேடுகள் எவையும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. எனவே பக்கச்சார்பான நியமனங்கள் என்பது என்னை அகற்றுவதற்கு சோடிக்கப்பட்ட கட்டுக்கதை.

ஜியன நிதி முறைகேடு

ஜபெட் விடயம் உலக வங்கியின் நிதித் திட்டத்தினூடாக இடம்பெற்றது. அதில் எந்தவிதமான நிதி மோசடிகளிலும் நான் ஈடுபடவில்லை. உலக வங்கியின் நிதித் திட்டத்தினை கையாளுவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்னர். பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் நிதியினைக் கையாள்வதற்கும் தனியான அதிகாரிகள் உண்டு.

பொருட்கள் கொள்வனவுக்கு முன்னர் துறைசார் நிபுணர் குழுவொன்றின் அங்கீகாரமும் பெறப்படுகின்றது. ஜபெட் விடயம் தொடர்பான சர்ச்சை உள்ளக கணக்காய்வாளர்களினால் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஜபெட்டுக்கான எந்த நிதியும் குறித்த வழங்குனர்களுக்கு வழங்கப்படவில்லை. அதில் எந்த ஊழலிலும் நான் ஈடுபடவில்லை. நிதியும் விரயம் செய்யப்படவில்லை. எனது இடையீட்டின் மூலமே வழங்குனருக்கான நிதி வழங்கள் தடுக்கப்பட்டுள்ளது. ஜபெட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அவ்வாறே உள்ளது.

விசாரணைகள் முடிவுறும் வரை குறித்த நிதி வழங்கப்படுவதும் என்னால் தடுக்கப்பட்டுள்ளது. அதில் நான் என்ன நிதி மோசடியினைச் செய்துள்ளேன் என்று எனக்குத் தெரியவில்லை. ஜபெட் வழங்கிய நிறுவனம் தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரிகளைப் பணித்துள்ளேன். குறித்த நிறுவனத்திற்கும் குறித்த பொருள் கொள்வனவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதுவிடயத்தில் எந்த முறைகேடுகளும் இடம்பெறக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இவை தொடர்பான விடயங்களை எமது அதிகாரிகளிடம் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவேதான் என்னை பதவியிலிருந்து அகற்றுவதற்கு நியாயமான காரணங்கள் இல்லாத நிலையில், சோடிக்கப்பட்ட இத்தகைய குற்றச்சாட்டுக்களைக் கொண்டு எனக்கெதிராக சேறு பூச ஆரம்பித்துள்ளனர். அதன் மூலம் என்னை நிலைகுலையச் செய்து எனது நிருவாகத்தினை சீரழிக்க முயற்சிக்கின்றனர். ஆனாலும் எனது நிருவாகம் எந்தவிதமான இடைஞ்சல்களும் இன்றி சிறப்பாக இடம்பெற்றுவருகின்றது.

நிருவாக சோடிப்புக்கள்

எமது பல்கலைக்கழகத்தில் பதிவாளர் மற்றும் நிதியாளர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளது. வெற்றிடங்கள் ஏற்பட்டதும் பதில் அதிகாரிகளை நியமிக்க வேண்டும். நியமித்த கையோடு நிரந்தர அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதியமைச்சின் சுற்றுநிருபம், ஏனைய சுற்றுநிருபவங்களுக்கு ஏற்பவே நடவடிக்கை எடுக்கமுடியும். இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் நியமனங்களை செய்வதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

அத்தகைய அனுமதியினைப் பெறுவதற்கான ஆவணங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த அனுமதி கிடைத்ததும் முறைப்படி நியமனங்கள் இடம்பெறும். அனுமதிக்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்கின்றோம். அனுமதி கிடைத்ததும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு உரியவர்கள் தெரிவு செய்யப்படுவர். அதில் எந்தவிதமான சோடிப்புக்களும் இல்லை.

ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது. எனவே இந்த விடயத்திலும் எந்தவிமான உண்மைகளும் இல்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விசாரணை UGC விசாரணை தொடர்பில் எனக்குத் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. நீதியான விசாரணை என்றால் இரு தரப்பினரது கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும். அவ்வாறானதொரு இருபக்க விசாரணை ஒன்று இடம்பெறவில்லை.

அத்தகைய விசாணைகள் இடம்பெறுகிறபோது அதற்கு முழு ஒத்துழைப்பினையும் வழங்கத் தயார். UGC விசாரணை அறிக்கை தொடர்பாக பேசப்படுகின்றது. அத்தகைய அறிக்கை தொடர்பில் எந்த விடயமும பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படவில்லை. அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக அனுப்பப்டும் பெட்டிசன்கள் அவர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தக்கூடும்.

சட்ட ரீதியாக எதனையும் எதிர்கொள்ளமுடியாதவர்களே பெட்டிசன்களை அனுப்புகின்றனர். வெளியிலுள்ள தமது முகவர்களைப் பயன்படுத்தி அதிகாரிகளுக்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றனர். UGC எனக்குமிடையிலான நிருவாக ரீதியான தொடர்பாடலில் எந்தச் சிக்கலும் இல்லை.

UGC இன் அறிவுறுத்தல்கள், ஏனைய சட்ட ஒழுங்குகளுக்கும் உட்பட்டு எனது நிருவாகம் இடம்பெறுகிறது. UGC இனால் கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு உரிய பதில்கள் அவ்வப்போது வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தின் தரநிலை - University Ranking

எமது பல்கலைக்கழகத்தின் தரநிலையினைக் குறைப்பதற்கு நான் காரணம் என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்திலும் எந்த உண்மையும் இல்லை.

ஏற்கனவே இந்தப் பல்கலைக்கழகம் 3வது இடத்தில் இருந்ததாக ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தப் பல்கலைக்கழம் இந்த நிலையினை அடையவில்லை. பல்கலைக்கழகங்களின் தரநிலையினைத் தீர்மானிப்பதில் பல காரணிகள் செல்வாக்குச்செலுத்துகின்றன.

ஆய்வு வெளியீடுகள் அவற்றுள் முக்கிய பங்காற்றுகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் ஆய்வு நடவடிக்கைகள் குறைந்துள்ளன. ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. முன்புபோன்று ஆய்வு மாநாடுகளுக்கு நிதிகளை ஒதுக்கீடு செய்யமுடியாத நிலையில் நாம் உள்ளோம். எம்மால் உழைக்கப்படும் பணமும் மிகவும் குறைவானது. ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது நாம் குறைந்த பீடங்களைக் கொண்டுள்ளோன்.

எமது விரிவுரையாளர் தொகையும் மிகவும் சொற்பமானது. வரையறுக்கப்பட்ட கற்கைநெறிகள் மட்டுமே இங்கு வழங்கப்படுகின்றன. வெளிநாட்டு மாணவர்களின் வருகையும் வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய காரணிகளே பல்கலைக்கழகத்தின் தரத்தில் பாதிப்புச்செலுத்துகிறது. பல்கலைக்கழகத்தின் தரநிலையினை மேம்படுத்துவதில் உபவேந்தர் மட்டுமல்ல, பல்கலைக்கழக ஒட்டுமொத்த சமூகமும் அதற்காக உழைக்க வேண்டும். பல்கலைக்கழகத்தின் தரநிலையினை மேம்படுத்துவதற்காக புதிய பீடங்களை அமைக்க வேண்டும், விரிவுரையாளர்களை ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட செய்வதற்கான தூண்டுதல்களிலும் நான் ஈடுபடுகின்றேன். உண்மையில் பல்கலைக்கழக தரநிலையில் நாம் பெரிய வீழ்ச்சி எதனையும் சந்திக்கவில்லை. ஆனால் நாம் இருக்கின்ற நிலை போதுமானது அன்று. அதனை முன்னேற்ற வேண்டும். அதற்கு பல்கலைக்கழகத்திலுள்ள அனைவரது கூட்டு முயற்சியும் அவசியம்.

அதேபோல் அவ்வப்போது பல்கலைக்கழகங்களின் தரநிலையில் மாற்றம் ஏற்படுவது வழக்கம். கடந்த 05 ஆண்டுகால பல்கலைக்கழகங்களின் உலகத் தரப்படுத்தலைப் பார்த்தால் இதனை புரிந்துகொள்ளலாம். இதில் நான் எந்தத் தவறினையும் செய்யவில்லை. என்னை ஊடகங்களின் முன்னிலையில் குற்றவாளியாக்குவதற்கு இந்தச் சோடிப்புக்களைச் செய்கின்றனர். உண்மை நிலையினை யாரும் பேசுவதில்லை.

நாட்டைவிட்டு தப்பியோட உபவேந்தர் முயற்சித்தமை

ஹஜ் புனித யாத்திரைக்காகச் செல்லவிருந்த என்னை நாட்டைவிட்டு தப்பியோட முயற்சித்ததாக சித்திரிக்கின்றனர். சவுதி மன்னரின் அழைப்பின் பேரில் இம்முறை ஹஜ் கடமையினை நிறைவேற்ற தெரிவுசெய்யப்பட்டேன். ஹஜ் கடமையினை நிறைவேற்றுவதற்காக விடுமுறை அனுமதியினை ஜனாதிபதியிடமிருந்து பெற்றிருந்தேன்.

எனக்கு சட்டப்படி விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நான் நாட்டைவிட்டு ஓடப்போவதாக எனக்கெதிராக பெட்டிசன்களை அடித்து தடுத்து நிறுத்தியுள்ளனர். எனது பயணத்திற்கு வழங்கப்பட் அனுமதியினை இறுதித் தருவாயில் கென்செல் செய்வதற்குச் செய்துள்ளனர்.

எனக்கு வழங்கப்பட்ட விடுமுறையினை உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்தார். கௌரவ அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்கவே எனது விடுமுறை இரத்துச் செய்யப்பட்டது. ஹஜ் கடமைக்கான வாய்ப்பினைப் பெறுவது ஒரு முஸ்லிமின் வாழ்க்கையில் ஒரு பாக்கியம். அந்தக் கடமையினை நிறைவேற்றுவதற்காக நான் சென்றேன்.

ஆனால் எனது மார்கக் கடமையினை நிறைவேற்றாமல் தடுப்பதற்கும் இவர்கள் முயற்சித்துள்ளனர். நாட்டை விட்டுத் தப்பியோடு எந்த எண்ணமும் எனக்கில்லை. தவறுகள் எதனையும் செய்யாத நிலையில் நான் ஏன் நாட்டைவிட்டு தப்பியோட வேண்டும். எந்தவொரு விடயத்திலும் நியாயமான பக்கச்சார்பற்ற விசாரணைகளை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

நான் இந்தப் பல்கலைகழகத்தின் பழைய மாணவன். இந்தப் பல்கலைக்கழத்தின் மீது எனக்கு மிகப்பெரிய பற்று இருக்கின்றது. காழ்ப்புணர்வுள்ள சிலரது போலிப் பிரச்சாரங்களுக்காக எனது நிறுவனத்தினைக் கைவிடுவதற்கு நான் தயாரில்லை. என்னை நம்பியிருக்கின்ற பல்கலைக்கழக சமூகத்திற்காக முழு முச்சுடன் இயங்குவதிலையே எனது கவனமுள்ளது.

அண்மைய தாக்குதல் முயற்சி

அண்மையில் சாய்ந்தமருதில் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அந்தத் தாக்குதலை உபவேந்தரின் சகோதரர் மேற்கொண்டார் என சமூக ஊடகங்களில் செய்தி பிரசுரமானது. அதில் எந்த உண்மையும் இல்லாத நிலையில் எனது சகோதரர் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டார். அந்தச் சம்பவத்தினைக் கொண்டு என்னையும் எனது சகோதரரையும் கொலைகாரர்களாக இவர்கள் சித்திரித்தனர். பொலிசாரினதும் நீதிமன்றத்தினதும் வேலையினை மேற்படி சமூக ஊடகச் செய்தியாளர்கள் செய்தனர். தற்சமயம் எனது சகோதரர் பிணையில் வெளிவந்துள்ளார். சந்கேத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு எதிராக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தது.

இவ்வாறு சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டாலும் பதவியிலிருந்து தற்காலிகமாக பதவியிலிருந்து இடை நிறுத்த வேண்டும் என பல்கலைக்கழக சட்டம் சொல்கிறது. எனது சகோதரர் என்றும் பாராமல் அவரை பதவியிலிருந்து இடைநிறுத்தி சட்டத்தினை அமுல்படுத்தியுள்ளேன். எனது சகோதரர் விடயத்தில் நான் எந்தவிதமான பாரபட்சங்களும் காட்டவில்லை.

குறித்த தாக்குதல் முயற்சியின் உண்மைத் தன்மையினை நீதிமன்றம் தீர்மானிக்கும். ஒரு குழுவினர் என்னை கொலைகாரனாக சித்திரித்து எனது பிறப்பு, குடும்பத்தினை மானபங்கப்படுத்துகின்றனர். இவர்களுக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன். இவர்கள் எனக்கெதிராக செய்திகளைப் பிரசுரிப்பதனை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். கடந்த காலங்களிலும் இவர்கள் இந்தக் கைங்கரியத்திலேயே ஈடுபட்டனர்.

மொத்தத்தில் என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. ஊடகங்களில் மக்களின் கவனத்தினைப் பெறுவதற்காக சோடிக்கப்பட்டது. காழ்ப்புணர்வு கொண்ட மிகச் சிலரது நடவடிக்கையே இது. இவர்கள் தொடர்பிலும் இவர்களது செயற்பாடுகள் தொடர்பிலும் ஊடகங்களின் கவனம் திரும்ப வேண்டும். இத்தகையோர் தமது சட்ட மீறல்களையும் ஊழல்களையும் மறைக்கவே என்மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவருகின்றனர். பல்கலைக்கழகமும் பல்கலைக்கழக நிருவாகமும் முன்னெப்போதும் இல்லாதவகையில் மிகவும் வினைத்திறனாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்கலைக்கழக சூழலில் கடந்த சில வருடங்களாக அமைதியான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

எனவேதான் சமூக ஊடகங்களிலும் ஏனைய ஊடகங்களிலும் வெளிவருகின்ற போலியான, இட்டுக்கட்டப்பட்ட, மோசடியான கருத்துக்களில் யாரும் ஏமாந்துவிடமாட்டார்கள் என நான் நம்புகிறேன். இந்த உண்மை பலருக்கு தெரியும். ஆனால் பொது வெளியில் அவற்றினை வெளியிடுவதற்கு அஞ்சுகின்றனர். ஏனெனில் பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள சிலர் சமூக ஊடகங்களில் அவர்களையும் அவர்களது குடும்பத்தினையும் மானபங்கப்படுத்துவர் என்ற அச்சத்தில் உள்ளனர். உண்மைகள் ஒரு நாள் வெளிவரும். சமூக ஊடகங்கள் தொடர்பான முறையான கட்டுப்பாடுகள் இல்லாததனால் யாரும் எதனையும் பேசலாம், எதனையும் எழுதலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. செய்திகளின் உண்மைத் தன்மைகளுக்கு அப்பால் எல்லாம் செய்திகள் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தானது. சமூக மாற்றத்தில் இது எதிர்வினையாற்றக்கூடும்.

- S.J. Sothy (Canada)

# இவ்வார ராசிபலன்

**30-06-2023 வெள்ளி தொடக்கம் 06-07-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** கௌரவம் கூடும் வாரம். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். குடும்பச் சுமைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல் நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிடைக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். பிள்ளையால் பெருமை சேரும். சச்சரவுகள் அகலும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வெற்றியும், வெகுமதியும் கூடும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வழக்குகள் சாதகமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: *9,8,5,4*
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**ரிஷபம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். கனிவான பேச்சு ஆறுதல் தரும். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். விறுவிறுப்பான காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். செல்வாக்கு பெருகும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சி நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் பாசம் அதிகரிக்கும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: உச்சிகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: *7,9,1,5*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,V




**மிதுனம்:** சுபிட்ஷங்கள் பெருகும் வாரம். காரியம் கைக்கூடும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வார்த்தையில் நிதானம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கலை ஆர்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். இனிப்பான செய்தி வரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உண்மைகள் வெளிப்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். தொழில் வழி தொல்லை குறையும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. ஆரோக்கியம் சீராகும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும். இயந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. இனிய எண்ணம் உருவாகும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: *1,4,3,5*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,E




**கடகம்:** பொருள் வரவு திருப்தி தரும் வாரம். பெருமைகள் கூடும். காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் சேரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தடைகள் விலகும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகன செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொல்லைகள் குறையும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள், வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்துபோகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: *7,9,3,2*
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** புதிய வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதாரம் மேன்மை தரும். குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இலக்கிய ஆர்வம் கூடும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நீதி தேவதை, அதிர்ஷ்ட எண்: *7,9,5,1*
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் வாரம். புதிய சந்தோஷம் குடிக்கொள்ளும் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன் பிறப்புக்கள் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசு துறையில் ஆதாயம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இஷ்ட தெய்வங்களால் க'டங்கள் மாறும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். வேண்டாத விஷயங்கள் விலகும். உடல் நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பங்கள் தீரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிக்கை, அதிர்ஷ்ட எண்: *1,9,5,3*
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,M




**துலாம்:** சாதனை படைக்கும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதிபெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். செய்த்தொழில் லாபம் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். பாராட்டுக்கள் கூடும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். திருமண வாய்ப்பு தேடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திருப்பு முனை ஏற்படும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: *4,9,5,1*
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,G




**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் வாரம். தங்க நகைகள் சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வியாபார விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பொறுப்புக்கள் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமானம் திருப்தி தரும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் தள்ளிப்போடவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். ஆனந்தம் குடிக்கொள்ளும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். உடல்நலம் மேம்படும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: *9,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

***(தொடர்ச்சி 25 பக்கம்)***

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கடன் சுமை குறையும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிணி நீங்கும். திருப்தி ஏற்படும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். சகோதரியினால் நன்மை உண்டு. ஊக்கம் அதிகரிக்கும். கல்வி ஆர்வம் கூடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குதூகலம் தாண்டவமாகும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். காதல் எண்ணம் ஏற்படும். வழக்குகளில் செலவு ஏற்படும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். பொன்னான தருணம். வளமான வாழ்வு அமையும். உலோகத் தொழில் லாபம் தரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதிப் பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். மனிதநேயம் மிகுதியாகும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**மகரம்:** பொன், பொருள் சேரும் வாரம். மருத்துவச் செலவு உண்டு. மங்களச் செய்தி வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் இருக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மனோ தைரியம் கூடும். மனதில் இருந்த தேவையில்லா பயங்கள் நீங்கும். இறை விழிப்புணர்வு கூடும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். புது தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். குதூகலம் தாண்டவமாகும். நன்மைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். தொழிலில் மந்த நிலை காணப்படும். சந்தோ'ம் அதிகமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** கலகலப்பான வாரம். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதிகள் கூடும். லாபம் திருப்தி தரும். உறவால் பண விரயம் ஏற்படும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். நல்லவர் நட்பு கிட்டும். வசதிகள் கூடும். ஆடை, அணிகலன் சேரும். கடவுள் பிரார்த்தனை கைகொடுக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்யம் சீராகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஒற்றுமை அதிகரிக்கும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். முகப்பொலிவு கூடும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசி தகவல் அலைச்சல் தரும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். புதுமையை விரும்புவீர்கள். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T





**மீனம்:** மங்களச் செய்தி வரும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு உயரும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். பணவரவு அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் நன்மை தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். பேச்சில் பணிவு தேவை. தொழில் அபிவிருத்தி அடையும். பழையக்கடன் வசூலாகும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பயணம் உற்சாகம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். வம்பு தும்புகள் ஒழியும். பாதிப்புக்கள் அகலும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தன்னம்பிக்கை அதிகமாகும். புகழும், பொருளும் பெருகும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,C




# அடிப்படை உரிமைகளை மதிப்பதன் மூலம் சமூகச் சீரழிவைக் குறைக்கலாம் – மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்

இலங்கை செய்திகள்
Sri Lanka News








(28-06-2023)

மனிதன் ஒரு உயிராக இருப்பதனால் அவனுக்கு வாழும் உரிமை உண்டு. மனித உரிமைகள் என்றால் எல்லா மனிதர்களுக்கும் உரிய அடிப்படையிலான உரிமைகளையும், சுதந்திரங்களையும் குறிக்கின்றன. ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்கு அமைதியான அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு என்னவெல்லாம் தேவையோ அவற்றை மனித உரிமைகள் எனக் கருதலாம்.

இவற்றில் அடிப்படைத் தேவைகளான நீர், உணவு, உறைவிடம் போன்றவற்றுடன் கொலை செய்யப்படாமலும். சித்திரவதை செய்யப்படாமலும். அவமதிக்கப்படாமலும் வாழ்வதற்கான உரிமையும் இதில் உள்ளடக்கப்படுகிறது எனவும் அடிப்படை உரிமைகளை மதிப்பதன் மூலமும், சட்டரீதியான தண்டணைகள் மூலமும், சமூகச் சீரழிவைக் குறைக்கலாம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (MWRAF) மற்றும் டயகோனியா னுயைமழயை நிறுவன அனுசரணையுடன் அம்பாறை மாவட்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல் ஹபீலா தலைமையில் சமூக அபிவிருத்தியும் இன நல்லிணக்கமும் என்ற தொனிப்பொருளில் பதன்கிழமை (28) மருதமுனை கலாசார மண்டபத்தில் தமிழ், முஸ்லீம் இளைஞர் யுவதிகள் பெற்றோர்கள் கலந்த கொண்ட செயலமர்வின் போது வளவாளராக கருத்துரை வழங்கிய அப்துல் அஸீஸ் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது,

இன்று நடைபெறுகின்ற அனைத்து செயற்பாடுகளிலும் மனிதனே அடிப்படையாவான். ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவனுடைய மதிப்பையும், உரிமையையும் பாதுகாக்க வேண்டியது சமுதாயத்திலுள்ள அனைவர்களினதும் கடமையாகும்.

2005ம் ஆண்டின் 30 இலக்க விலைமாதர் தொழிலுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்துவதை தவிர்த்தல் மற்றும் அதற்கு எதிராக கருமமாற்றுதல் பற்றிய இணக்கச் சட்டம் இலங்கையில் உள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் தண்டணைகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி, இத்தொழிலில் ஈடுபடுத்தல் என்பது சம்பந்தப்பட்ட நபருடைய விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றியோ அல்லது பணத்திற்கு அல்லது வேறு உதவிக்காகவோ ஒரு நாட்டில் அல்லது அந்த நாட்டிற்கு வெளியில் விலைமாதர் தொழிலுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை கொண்டு செல்லல், விற்பனை செய்தல், விலைக்கு வாங்குதல் ஆகியவற்ற குற்றமாக கருதுவர்.

இது மட்டுமின்றி இளைஞர்களைப் பாதுகாக்க மிகவும் பெருமதியான சட்டங்கள் எமது நாட்டில் இருப்பதை அனைவர்களும் அறிய வேண்டும்.

மக்களின் சுகாதார, பொருளாதார நல்வாழ்வுக்கான சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் 2006ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் திகதி நிறைவேற்றப்பட்டது. இது 2006 டிசம்பர் 1ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

குறிப்பாக இச்சட்டத்தின்படி 21 வயதுக்குட்பட்ட எவருக்கும் சிகரட் மதுசாரம் அல்லது பியர் விநியோகித்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதைச் செய்வோருக்கு தண்டப்பணமும் அல்லது ஒரு வருட சிறை அல்லது இரண்டும் வழங்கப்படும்.

எனவே எந்தளவுக்கு ஒரு மனிதனுக்கு உரிமை இருந்தாலும் அது சமுகத்தின் நலன் கருதி மட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகவே இருக்கின்றது. இத்தகைய சட்டங்கள் செயற்படும் போது சிகரட், மதுசாரம் அல்லது பியர் தொடர்பில் சிறுவர்களும், இளைஞர்களும் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதோடு இதன் அடுத்த கட்டமான விபசாரம் என்னும் இழிதொழில் வணிகத்தை இல்லாதொழிக்க முடியும் என்பதை அனைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். மேற்கண்டவாறு அப்துல் அஸீஸ், கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன் இச்செயலமர்வில் மற்றுமொரு வளவாளராக தேசிய ஔடத அபாயகர கட்டுப்பாட்டு அதிகார சபையின் வடக்கு மற்றும் கிழக்கு இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம் ரசாட் போதைப்பொருட்களின் தாக்கம் தொடர்பில் விளக்கமளித்தமை குறிப்பிடத்தக்கது.




OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**IS NOW @ CANADA**

**42 LANGSTON DRIVE, BRAMPTON (L6V 3W7)**

**Contact: 416 904 6278**

21rajbhavan@gmail.com

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.


MORTGAGE FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
COMMERCIAL
INDUSTRIAL
CONSTRUCTION
VACANT LAND
we are here to clarify all your MORTGAGE DOUBTS
Contact Me Today
NESAN
Subramaniam
416-908-5656
| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants
WE DEAL WITH ALL BANKS
Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465
Scotiabank
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, ON. M1B 2W1 canada
www.nesan.ca

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
• 905-808-9930 • 905-783-1895
5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1421 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 30, 2023

# 'FORD FEST' brought most of the PC MPPs to Scarborough Thomson Park

## அதிகளவு கொன்சர்வேர்ட்டிவ் மாகாண அரசின் உறுப்பினர்களை தொம்சன் பூங்காவிற்கு அழைத்து வந்த "FORD FEST" ஒன்றுகூடல்




ஒன்றாரியோ மாகாண அரசின் முதல்வர் டக் போர்ட் அவர்களின் தலைமையில் அவரது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அதிகளவு கொன்சர்வேர்ட்டிவ் மாகாண அரசின் உறுப்பினர்களை கடந்த 23ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை தொம்சன் பூங்காவிற்கு அழைத்து வந்த **'FORD FEST'** அதன் மூலம் ஸ்காபுறோ வாழ் மக்களின் ஆதரவு முதல்வர் டக் போர்ட் அவர்களுக்கு உண்டு என்பதை பறை சாற்றியது என்று அங்கு கலந்து கொண்ட பல தமிழ் பேசும் அன்பர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## கனடா "ஆரபி" புரடக்சன் தயாரிப்பில் வெளிவரவுள்ள 'Finder' திரைப்படத்திற்கான இறுதிக் கட்ட பணிகள் சென்னையில் துரிதமாக நடைபெறுகின்றன

### தயாரிப்பாளர் ரஜீவ் சுப்பிரமணியம் சென்னையில் தங்கியிருந்து இயக்குனர் மற்றும் கலைஞர்களுக்கு உற்சாகமூட்டி வருகின்றார்




கனடாவில் கலை மற்றும் இசை சார்ந்த முயற்சிகளுக்கு நல்லாதரவு வழங்கி வரும் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் "ஆரபி" புரடக்சன் தயாரிப்பில் வெளிவரவுள்ள **'Finder'** திரைப்படத்திற்கான இறுதிக் கட்ட பணிகள் சென்னையில் துரிதமாக நடைபெறுகின்றன எமது சென்னைச் செய்தியாளர் அருண் அறிவித்துள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

## "சிலம்பொலி சேஷ்த்திரா" மாணவியான செல்வி நித்ரா ஜெயராமனின் பரதநாட்டிய அரங்கேற்றம்



கனடாவில் மிக நீண்டகாலமாக இயங்கிவரும் "சிலம்பொலி சே'த்திரா" நடனக் கல்லூரியின் ஸ்தாபகரும் குருவுமாகிய ஸ்ரீமதி ஜனனி குமார் அவர்களினதும் நடனச் செல்வி தாமிரா ஜனனி குமார் ஆகியோரின் மாணவியான அரங்கேற்றச் செல்வி நித்ரா ஜெயராமன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 24-06-2023 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.
அரங்கேற்றத்தின் பிரதம விருந்தினராக தமிழ்நாட்டிலிருந்து "கலைமாமணி" சாகிர் உசைன் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.

## ஸ்காபுறோ கோணேஸ்வரன் குடும்பத்தினர் மற்றும் S&B Pallets நிறுவனம் இணைந்து ஸ்காபுறோ வைத்தியசாலைகளின் குழுமத்திற்கு வழங்கிய 4 இலட்சத்து 9ஆயிரம் கனடிய டாலர்கள்




கனடாவில் புகழ்பெற்ற வர்த்தகக் துறை குடும்பத்தினராக விளங்கும் கோணேஸ்வரன் குடும்பத்தினர். அவர் தந்தை கோணேஸ்வரன் புதல்வர்தகள் விஜேய் கோணேஸ்வரன், ரஜீவ் கோணேஸ்வரன், சஞ்சய் கோணேஸ்வரன் மற்றும் ரஞ்சித் கோணேஸ்வரன் மற்றும் அவர்களின் **S&B Pallets Ltd** நிறுவனம் இணைந்து ஸ்காபுறோ வைத்தியசாலைகளின் குழுமத்திற்கு 4 இலட்சத்து 9 ஆயிரம் கனடிய டாலர்கள் வழங்கிய செய்தியான கனடியத் தமிழர்களுக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

## ஜேர்மனி வாழ் கவிதாயினி "ஜெயஸ்ரீ" என்னும் ஜெயந்தினி ஸ்ரீகரக்குருக்கள் அவர்களின் கவிதை நூல்கள் அறிமுகவிழா



நீண்ட காலமாக கவிதை உலகில் சஞ்சரித்து வருபவரும் தனது கவிதைகளால் ஐரோப்பிய நாடுகளில் நன்கு அறிமுகமானவருமான ஜேர்மனி வாழ் கவிதாயினி "ஜெயஸ்ரீ ஜெயந்தினி ஸ்ரீகரக்குருக்கள் அவர்களின் இரண்டு கவிதை நூல்கள் அறிமுகவிழா கனடா ஸ்காபுறோ நகரில் கடந்த 23ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
733 **Birchmount Rd, Scarborough, ON M1K 1R5** என்னும் விலாசத்தில் அமைந்துள்ளகனடா கந்தசாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற அறிமுகவிழாவில் அவரது கவிதை நூல்களான "சிறகு விரித்த பட்டாம் பூச்சி" மற்றும் "என் மனவானில் சிந்திய முத்துக்கள்" ஆகியவை அறிமுகம் செய்து வைக்கப்பெற்றன. அறிமுகவிழாவிற்கு கனடா கந்தசுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு சு.முத்துராமலிங்கம் (முத்து) தலைமை தாங்கினார். தொடர்ந்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். (தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)